ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

15.08.2012 - மலர் 09, இதழ் 24



வாசகர்களுக்கு 'ஈத் முபாரக்'

## செவ்வாயில் தரையிறங்கிய கியூரியோசிடி விண்கலம்



## பனிக் காலத்தில் நிகழும் மாற்றங்கள்...

வாசகர் முகம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வரலாற்றிலிருந்து..

# அதிக லாபத்தை எதிர்பார்த்த ஆங்கில ஆட்சியாளர்கள்

சென்னையில் இருந்து கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆங்கில அதிகாரிகள் இந்நாட்டிற்கு வருகை தந்தனர். கிழக்கிந்திய வர்த்தக சங்கம் மேற்கொண்ட செலவினங்களை மீண்டும் பெறுவதற்கும் லாபத்தை அடைவதற்கும் அவர்கள் பெருமுயற்சி எடுத்தனர்.

தமக்கேற்பட்ட செலவினங்களை ஈடுசெய்யவேண்டும் என அவசரமடை[illegible] அதிகாரிகளுக்கு அந்தந்தப் பிரதேசங்களின் வருமான முறை குறித்து பரிசீலனை செய்து அதன்படி செயற்பட போதிய அவகாசம் இருக்கவில்லை. விரைவாகப் பணத்தையோ, பணமாக மாற்றக்கூடிய பொருட்களையோ பெறுவதில் முனைப்புடன் செயற்பட்டனர். அதனால், ராஜகாரியமுறை அவர்களுக்குத் தேவைப்படவில்லை. ஆனால், புராதன மன்னர்கள் குளம், கால்வாய், பௌத்த விகாரை, மாளிகை போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு இராஜகாரிய முறைமூலம் சேவைகளைப் பெற்றனர். கிழக்கிந்திய வர்த்தக சங்க அதிகாரிகள் அத்தகைய நடைமுறைபற்றி அறிய விரும்பவில்லை.

அதனால், அவர்கள் தமக்கு நன்கு பரீட்சயமான சென்னை வருமான முறையை இங்கு அறிமுகப்படுத்தினர். ஆனால், சிங்கள விதானைமார்களுக்கு இந்த முறை புரியவில்லை. இதனால், அவர்களை சேவையில் இருந்து ஆங்கிலேயர் விலக்கினர். அதற்குப் பதிலாக சென்னையிலிருந்து அதிகாரிகளை அழைத்து வந்தனர். இதனை அக்கால சிங்களவர்கள் விரும்பவில்லை. அத்துடன், சிங்கள அதிகாரிகளுக்குப் பதிலாக தமிழ் அதிகாரிகளை நியமித்தமையும் அதிருப்தி நிலை தொடரக் காரணமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் வெளியே செல்லத் தடை

பாடசாலை நேரத்தில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடமைகளுடன் நேரடித் தொடர்பில்லாத வேலைகளுக்காக பாடசாலையை விட்டு வெளியே செல்வதற்குத் தடை விதிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இந்தத் தடை விதிப்பு பாடசாலை விடுமுறையைத் தொடர்ந்து ஆரம்பமாகவுள்ள புதிய தவணையிலிருந்து அமுலுக்கு வரவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



இதற்கமைய, பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலை நேரமான காலை 7:30 மணியிலிருந்து பிற்பகல் 1:30 மணி வரையான காலப் பகுதியில் பாடசாலையில் கட்டாயம் இருக்க வேண்டும் என கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு சில ஆசிரியர்கள் தமது கடமைகளுக்கு அப்பாற்பட்ட தேவைகளின் நிமித்தம் பாடசாலை நேரத்தில் வெளியே செல்வதனால், பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடைப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தமது கடமைகளுடன் நேரடித் தொடர்பில்லாத விடயங்களுக்காக வெளியே செல்வதாயின், பாடசாலை முடிவடைந்த பின்னரே செல்ல வேண்டும். அத்துடன், கல்வியுடன் நெருங்கிய தொடர்புடைய விடயங்களுக்காகவோ அல்லது கட்டாய தேவைகளுக்காகவோ வெளியே செல்ல வேண்டுமாயின், அதற்காக பாடசாலை அதிபரிடமிருந்து விசேட அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பரீட்சை வினாத்தாள்களில் சிக்கல்; மாணவர்கள் உளரீதியில் பாதிப்பு!

## இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பல்வேறு வினாத்தாள்களில் ஆரம்பத்திலிருந்தே சிக்கலான வினாக்கள் இடம்பெற்று வருகின்றமையினால், மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிப்படைந்துள்ளனர் என இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; இணைந்த கணிதம் வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II, உயிரியல் விஞ்ஞான வினாத்தாள் I ஆகியவற்றிலும் இவ்வாறான சிக்கலான கேள்விகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான கேள்விகளுக்கு விடையளிக்க முயற்சிக்கும்போது, ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கப் போதிய நேரமின்மையால் மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகின்றனர்.




அத்துடன், பரீட்சைகள் திணைக்களத்தின் இத்தகைய தவறுகள் காரணமாக, பரீட்சை எழுதும் மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, பரீட்சைகள் ஆணையாளரும் கல்வி அதிகாரிகளும் மாணவர்களின் எதிர்காலத்தை வீணடித்துவிடாமல் செயற்படுமாறு வலியுறுத்துவதோடு, இனிவரும் காலங்களில் நடைபெறும் பரீட்சைகளில் இத்தகைய தவறுகள் இடம்பெறாதவகையில் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# நாடெங்கிலும் உள்ள 408 பாடசாலைகளில் தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்கள்



இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின்கீழ், நாட்டிலுள்ள 408 பாடசாலைகளில் தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்திற்கமைய; கணினிக் கூடங்கள், மொழி அறிவகங்கள், மொழிப் பயிற்சி என பல்வேறு பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. பாடசாலை மாணவர்கள் உட்பட, பாடசாலையை விட்டு வெளியேறியவர்களும் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொரியா, ஜப்பான், சீனா போன்ற பிற நாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வகையிலும் இங்கு வசதிகள் செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# இஸட் புள்ளி பிரச்சினைக்குத் தீர்வுகாணும்வரை பல்கலைக்கழக மாணவர் அனுமதி இல்லை

***2011 க.பொ.த. உ/தரப் பரீட்சையின் இஸட் புள்ளிகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை, 2012-2013 கல்வி ஆண்டுக்காக பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளப் போவதில்லை என உயர் நீதிமன்றத்துக்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.***



***கடந்த வருட க.பொ.த. உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய, அண்மையில் வெளியிடப்பட்ட புதிய இஸட் புள்ளிக்கு எதிராக 33 மாணவர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்தே, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.***

# சுற்றாடல் முன்னோடி தேசிய பாசறை

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் பத்தாவது சுற்றாடல் முன்னோடி தேசிய பாசறை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நான்காம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றாடல் முன்னோடித்திட்டமானது, தற்போதளவில் 6,000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாக மேலும் அறியக்கிடைக்கின்றது.

அத்துடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தங்கம் மற்றும் வெள்ளை வர்ணப்பதக்கம் பெற்ற சுமார் 500 சுற்றாடல் முன்னோடிகளும் சுற்றாடல் பொறுப்பாசிரியர்களும் மேற்படி சுற்றாடல் முன்னோடி தேசிய பாசறையில் பங்குபற்றவுள்ளதாக மேலும் அறியவருகின்றது.

**வாசகர் முகம்**

**'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்**
**த.ஹரிகேஸ்வினி,**
**உன்னஸ்கிரிய.**



**30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி**
**ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்**
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
அழகிய பேக் (Bag) ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம்.
அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன
எல்லா மாவணவ/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெற்றி-தோல்வியை ஒருமனதுடன் ஏற்பதே சிறந்தது

**அனேகமாக, மனிதர்கள் சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழவே விரும்புகின்றனர். அன்றாட வாழ்வில் மிகச் சிறந்தவற்றை மனிதர்கள் தெரிவு செய்வதன் காரணமும் அதுவே. இதற்கமைவாகவே, போட்டிகளில் அல்லது பரீட்சைகளில் நாம் வெற்றிகளை எதிர்பார்க்கின்றோம். ஆனால், எப்பொழுதும் நாம் இத்தகைய வெற்றிகளை அடைவதில்லை. இதனால், தோல்விகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு நாம் தயாரானவர்களாக இருக்கவேண்டும். அந்த வகையில் வெற்றி-தோல்வியை ஒருமனதாக வரவேற்று ஏற்றுக்கொள்வதே சிறந்த பண்புமாகும்**

## வெற்றி-தோல்வியை எவ்வாறு ஏற்கலாம்?

*** வெற்றியாளர்களை/வெற்றி பெற்ற அணிகளை வாழ்த்துதல்:**
நாம் வெற்றியடைந்தாலும் இதே போன்று வாழ்த்துக்கள் கிடைக்கும் என்ற சிந்தனையுடன் வெற்றியாளர்களின் சந்தோஷத்தில் பங்கு கொள்ளல்.

*** தமது ஆற்றல் திறன் குறித்து மகிழ்ச்சியுறல்:**
போட்டியாளர்கள் மற்றும் வெற்றியாளர்களுடன் இணைந்து நாமும் எமது ஆற்றலைக் காட்டியுள்ளோம் என்றும் எமது ஆற்றல் திறனுடன் போட்டியிட்டே, வெற்றியாளர்கள் வெற்றி பெற்றனர் என்பதை உணர்ந்து கொள்ளல்.

*** எம்மிடம் உள்ள திறமைகள் குறித்து மகிழ்வடைதல்:**
எம்மிடம் திறமைகள் இருப்பதனை உணர்ந்து மகிழ்ச்சியடைய வேண்டும்.

*** போட்டியில் இணைந்து கொண்டமை குறித்து மனப்பூர்வமாகப் பெருமை கொள்ளல்:**
வெற்றிகளையும் பரிசில்களையும் பெற மட்டுமே போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என்பதை உணர வேண்டும். வெற்றியடைந்தாலும் தோல்வியடைந்தாலும் அதன்மூலம் கிடைக்கும் நன்மைகள் அனுபவங்கள் அளப்பரியன. அதாவது, உடற்பயிற்சி, பிரபல்யம், அனுபவம், அறிவு, போட்டியின் தன்மைகள், போட்டியின் சட்டதிட்டங்கள், தலைமைத்துவம், ஒற்றுமை என்பன போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் எமக்குக் கிடைக்கின்றன.

*** தோல்விக்கான காரணத்தை அறிதல்:**
தோல்விக்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதன் ஊடாக, நாம் எங்கு தவறு செய்தோம் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். இத்தகைய பலவீனங்களை சரிப்படுத்திக் கொள்வதனூடாக, அடுத்த போட்டியில் வெற்றியின் சிகரத்தை எட்டமுடியும்.

*** அடுத்த முறை வெற்றியடைய திடசங்கற்பம் கொள்ளல்:**
எமது திறமைகளை நன்கு செழுமைப்படுத்திக்கொண்டு, அடுத்த தடவை வெற்றிப்பாதையை நோக்கி முன்னேற வேண்டும். எம்மிடம் திடசங்கற்பமும் அர்ப்பணிப்பு மனோபாவமும் இருப்பின், வெற்றியை இலகுவில் அடைந்துவிடலாம்.

## பட்டை தீட்டப்பட வேண்டிய குணாதிசயங்கள்

*** பொறுமை:** தோல்வியை பொறுமையுடன் எதிர்கொள்வதே நன்று. அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றி கிட்டுவதில்லை. அதனால், கிடைக்கும் வெற்றி தோல்வியைப் பொறுமையுடன் எதிர்கொள்ள வேண்டும்.

*** ஏற்றுக்கொள்ளும் பக்குவம்:** போட்டியில் வெற்றி பெற்ற அணி எழுப்பும் மகிழ்ச்சி ஆரவாரங்களை மனப்பக்குவத்துடன் ஏற்கும் சக்தி இரு[illegible]வேண்டும். தோல்வியை வெற்றியு[illegible] எதிர்கொள்ள அது உதவி புரியும்.


*** நேர்மைத்தன்மை:** வெற்றி-தோல்வியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் நேர்மைத்தன்மை இருக்க வேண்டும். இந்த இரண்டு விடயங்களையும் எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றார் என்பதனைப் பொறுத்து ஒருவரின் நேர்மைத்தன்மை மற்றும் ஆழுமையை அறிய முடியும்.

*** நடுநிலைமையுடன் சிந்தித்தல்:** எமது பலவீனமே எதிர்த்தரப்பிற்கு வெற்றியை அளித்துள்ளது என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். வெற்றி-தோல்வி பற்றி நடுநிலைமையுடன் சிந்திப்பதனூடாக துன்பம், வேதனை என்பவற்றைத் தவிர்க்க முடியும்.

*** சவால்களை எதிர்கொள்ளல்:** அனைத்துப் போட்டிகளும் சவால் மிக்கவையே. வெற்றி-தோல்வி கிடைத்தாலும் போட்டியின் இறுதி வரை பங்குபற்றுவது அவசியமாகும். அப்பொழுது சவால்களை எதிர்கொள்ளும் திறன் எமக்குக் கிடைக்கின்றது.

*** வெற்றியினால் மமதை அடையக்கூடாது:** போட்டியில் பெற்ற வெற்றியைப் பயன்படுத்தி ஏனைய பங்குபற்றுனர்களை புண்படுத்தக்கூடாது. கேலிப் பேசக்கூடாது. வெற்றியினால் மமதை அடையாமல் அமைதியுடன் அதனை ஏற்பதே சிறந்த பண்பாகும்.

*** போட்டித்தன்மையை எதிர்கொள்ளல்:** இரு போட்டியாளர்கள் அல்லது இரு அணிகள் வெற்றிக்காக முயற்சிக்கின்றன. வெற்றியை அடைவதைவிட, போட்டியை உரிய வகையில் எதிர்கொள்ளவே அவை முயற்சிக்க வேண்டும். அதனூடாக, பல அனுபவங்களை சிறப்பாக பெற்றுக் கொள்ள முடியும்.



## வெற்றி-தோல்வியை சமனாகக் கருதுவதனால் ஏற்படும் நன்மைகள்

*** சிறந்த மன ஆரோக்கியம் ஏற்படல்:** வெற்றி-தோல்விகளை சமமாக ஏற்காதபட்சத்தில் மனோரீதியிலான பாதிப்புகள் ஏற்படும். இவ்வாறானவர்கள் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுவர். வெற்றி தோல்வியினை ஒருசேர ஏற்றுக்கொள்வதனால் மன ஆரோக்கியம் மேம்படும்.

*** மனத்திருப்தி ஏற்படல்:** வெற்றி-தோல்வியினை ஒருமனதாக ஏற்காதபோது, மனதில் உள்ள எதிர்பார்ப்புகள் பாதிப்படைந்து விரக்தி அடைய நேரிடும். ஆனால், வெற்றி-தோல்வியினை ஒன்றாக மதித்து ஏற்றுக்கொள்வோரின் மனம் வெற்றி கிடைத்தாலும் தோல்வி கிடைத்தாலும் அது அவர்களது மனதுக்கு திருப்தியானதாகவே அமைகின்றது.

*** உள்ளம் பலமடையும்:** தோல்வி அடைந்தவுடன், பாதகமான சிந்தனைகளை மேற்கொள்வோர் பெரும்பாலும் பக்குவம் அல்லாதவர்களாவர். ஆனால், வெற்றி-தோல்வியினை ஒருசேர ஏற்றுக் கொள்பவர்களின் மனம் பலமுள்ளதாக இருக்கும்.

*** சிறந்த நற்குணங்கள் ஏற்படும்:** பொறுமையின்மை, அகங்காரம், பலவீனம் கொண்டவர்கள் எப்பொழுதும் வெற்றி-தோல்வியினை சமமாக மதிக்காதவர்களாகவே இருப்பார்கள். ஆனால், வெற்றி-தோல்வியினை சமமாக மதிப்பவர்களுக்கு சிறந்த நற்பண்புகள் ஏற்படும்.

*** அனைவரினதும் பாராட்டுகள் கிடைத்தல்:** வெற்றி-தோல்வியினை சமமாக மதிக்காதவர்களை அனைவரும் புறக்கணிக்கும் நிலை ஏற்படும். வெற்றி தோல்வியினை சமமாக எதிர்கொள்பவர்களின் குணநலன்கள், நடத்தைகள் சமூகத்தின் பாராட்டுகளைப் பெற்றுத் தரும்.

*** எதிர்கால வாழ்க்கை வெற்றிகரமாகும்:** வெற்றி-தோல்வியினை சமமாக மதிப்பதன் ஊடாக, எதிர்கால வாழ்க்கையினை சிறப்பாக்கிக் கொள்ளமுடியும். போட்டிகளில் பங்கு கொள்வதனூடாக, வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல் பெருகும்.

*** அனுபவம் மிக்க நபராகுதல்:** வெற்றி-தோல்வியினை சமமாக ஏற்காதவர்கள் போட்டிகளில் பங்கு கொள்ளத் தயக்கம் காட்டுவார்கள். அவ்வாறான தன்மை கொண்டவர்கள் அனுபவம் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். ஆனால், வெற்றி-தோல்வி நிலையினை சமமாக ஏற்பவர்கள் போட்டிகளில் பங்குபற்றிய பெரும் அனுபவசாலிகளாக இருப்பார்கள். அதனால், அனுபவம் மற்றும் திறமை வாய்ந்த நபராகத் திகழமுடியும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருள் மிகு ரமழான் விடைபெறும்வேளை இது...

ரமழான் மாதத்தின் இறுதிப் பத்தில் இருக்கின்றோம். அதாவது, மகத்துவம் மிக்க ரமழான் எம்மை விட்டு விடை பெறுகின்ற நேரம் இது. இந்த இறுதிப் பத்து நாட்களிலும் இயலுமானளவுக்கு நன்மை யான காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோம்.


## இறுதிப் பத்தின் முக்கியத்துவம்

ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த லைலதுல் கத்ர் இரவி லேயே அல்-குர்ஆன் அருளப் பட்டது என்பதால், ரமழான் நோன்பு காலத்தில் இறுதிப் பத்து நாட்களும் சிறப்பான வையாகக் கருதப்படுகின்றன.

''நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்: ''ரமழானின் இறுதிப் பத்தில் லைலதுல் கத்ரைத் தேடிக் கொள்ளுங்கள். எவர் லைலதுல் கத்ர் இரவில் ஈமானுடனும் நன்மையை நாடியும் நின்று வணங்குகின்றாரோ, அவரது முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்'' (ஸஹீஹ் முஸ்லிம்).

''நபி (ஸல்) அவர்கள் ரமழானின் இறுதிப் பத்தில் நுழைந்துவிட்டால், முழு இரவும் வணங்குவார்கள். குடும்பத்தி னரையும் விழிக்கச் செய்வார்கள். தங்களது ஆடையை இறுக்கக் கட்டி உற்சாகத்துடன் வணக்கத்தில் ஈடுபடு வார்கள்'' என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் (ஸஹீஹுல் புஹாரி, லஹீஹ் முஸ்லிம்).

ஆக, ரமழான் எமக்குக் கற்றுத் தருகின்றவைகளும் தந்தவைகளும் ஏராளம். நன்மையான காரியங்களில் அதிகம் ஈடுபடுவதனால், அல்லாஹ்வின் அருளைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றோம். இஸ்லாத்தின்பால் நமது வாழ்க்கையை மேலும் சிறப்பாக வழிநடத்திக்கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது. எம்மை நாமே நெறிப்படுத்தி - கட்டுப்படுத்தி வாழக்கூடிய பயிற்சியைப் பெற்றுள்ளோம். எனினும், இவை அனைத் தையும் ரமழானுடன் நிறுத் திக்கொள்ளக்கூடாது. ஏனெனில், ரமழான் நோன்பு காலமானது, குறித்த காலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டதன்று; அது நமது பூரண வாழ்க்கைக்குமான சிறந்த பயிற்சிக்காலமாகும். அத்து டன், நாம் நோற்ற நோன்புகளுக் கும் நன்மையான காரியங்களுக் கும் உரிய கூலியை அல்லாஹ் ரமழான் முடிந்த பிறகே வழங்கு கின்றான்.



## ஸகாதுல் ஃபித்ரும் நோன்புப் பெருநாளும்

நோன்புப் பெருநாள் தினத்தில் பெருநாள் தொழுகைக்கு முன்பதாக,



குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக் காகவும் இரு கைகளின் கொள்ளள வின் நான்கு மடங்கு தர்மம் கொடுக்கப்படல் வேண்டும். கோதுமை, பேரீச்சம்பழம் உட்பட, ஏழைகளுக்குப் பயன்படும் விதத்தில் நாம் விரும்பும் பொருட்களை இதற்காகக் கொடுக்கலாம். மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக, ஓரிரு நாட்களுக்கு முன்னதாகவும் கொடுக்க லாம். இது 'ஸகாதுல் ஃபித்ர்' எனப்படு கின்றது. இதன் நோக்கம்: பெருநாள் தினத்தில் ஏழைகள் பட்டினி இருக்கக் கூடாது என்பதும் நோன்பாளியிடமி ருந்து வீணான தவறுகள் ஏற்பட்டிருப் பின் அவற்றிலிருந்து தூய்மைப்படுத் திக்கொள்வதும் ஆகும்.

ஷவ்வால் மாதம் தலைப்பிறை பார்த்த பின்னர் கொண்டாடப்படுவது தான் 'ஈதுல் ஃபித்ர்' நோன்புப் பெருநாள் ஆகும். 'ஈத்' எனும் அரபுப் பதத்திற்கு 'திரும்பத் திரும்ப வருதல்' என்பது பொருளாகும். பெருநாட்கள் ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப வருவதால்தான் இப்பெயர் பெற்றது. பெருநாள் தினத்தில் காலையில் எழுந்து-குளித்து-புத்தாடைகளை அணிந்துகொள்ளலாம். இது சுன்னத் தாகும். நோன்புப் பெருநாள் தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்னர் காலை உணவு உட்கொள் வது விரும்பத்தக்கது. இது நபி வழி யாகும். பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின்னர், பெருநாள் உரையை செவிமடுப்பதோடு, குடும் பத்தினர்களுக்கும் உறவினர்கள், நண்பர்கள் உட்பட, நம்மை விட்டுப் பிரிந்தவர்களுக்காகவும் பிரார்த்த னைகளில் ஈடுபடுவது சிறந்தது.

அத்துடன், எல்லோருடனும் ஸலாம் கூறி நமது பெருநாள் வாழ்த்துக் களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அயல் வீடுகள், உறவினர் வீடுகளுக் குச் செல்வதோடு, எமது வீடுகளுக் கும் அவர்களை அழைக்கலாம். நமது வீடுகளில் தயாரிக்கப்படுகின்ற உணவுகளை அவர்களுக்கும் வழங்க லாம். இதன்மூலம் எமது உறவு களைப் பலப்படுத்திக்கொள்ள முடியும்.

ஆகவே, ரமழானின் வசந்தம் எம் மனங்களில் என்றும் மணம் வீசட் டும். அதற்கு அல்லாஹுத்தஆலா நம் எல்லோருக்கும் அருள் புரிவானாக! அனைவருக்கும் எமது இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்.

-ஈத் முபாரக்-

-ஸாரா

## ரமழானின் மூலம் பெற்றுக்கொள்கின்ற முழு வாழ்க்கைக்குமான பயன்கள் சில...

* பாவச்செயல்களில் இருந்து நம்மைத் தடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பை ரமழான் வழங்குவதால், அதனைத் தொடர்ந்து வரும் காலங்களிலும் அத்தகைய செயல்களிலிருந்து விடுபட்டு இறையச்சமுள்ளவர்களாக நாம் மாற்றப்படுவோம்.
* ஐவேளைத்தொழுகை உட்பட, சுன்னத்தான தொழுகைகளிலும் அதிக ஈடுபாடு ஏற்படும்.
* அல்-குர்ஆனை மேலும் மேலும் பொருள் விளங்கி ஓதி வரவும் அதன்படி நடக்கவும் ஆர்வம் ஏற்படும். அல்-குர்ஆனுடனான தொடர்பு அதிகரிக்கும்.
* அல்லாஹுத்தஆலாவிடம் பாவமன்னிப்புக் கேட்பதை வழக்கப்படுத்திக்கொள்வோம்.
* ஸகாத், ஸதகா போன்ற தானதர்மங்களில் ஈடுபடுவதை அடுத்து, பிறருக்கு உதவும் மனப்பான்மை மேலோங்கும்.
* ரமழானுக்குப் பின்னர் ஏனைய சுன்னத்தான நோன்புகளையும் நோற்றிட ஆர்வம் ஏற்படும்.
* குறிப்பாக நற்செயல்கள், நற்சிந்தனைகள் நம்மிடம் மேலோங்கிக் காணப்படும். அவற்றின் மீதான ஈடுபாடும் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிய கடலுக்கடியி 'யொனாகுனி பிரமிட்

*பிரமிட்கள் என்று கூறும்போது, எமது நினைவுக்கு வருவது எகிப்தில் காணப்படும் பிரமாண்டமான பிரமிட்களே ஆகும். பண்டையகால ஏழு அதிசயங்களில் ஒன்றாகவும் பிரமிட்கள் காணப்படுகின்றன. கூம்பு போன்ற அமைப்பில் காணப்படுகின்ற இந்த பிரமிட்கள் இறந்துபோன அரசர்களின் கல்லறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த பிரமிட் வடிவங்கள் எகிப்தில் மட்டுமன்றி; உலகில் பல நாடுகளிலும் உள்ளன. அந்தவகையில், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பிரமிட் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்த அபூர்வமான பிரமிட் ஜப்பானுக்கு அண்மையில் உள்ள கடலுக்கடியில் காணப்படுகின்றது. இந்தப் பிரமிட் இன்னும் கண்டறிய முடியாத மர்மமாகவே உள்ளது. இந்தப் பிரமிட் எதற்காகக் கட்டப்பட்டது? இதனைக் கட்டியவர் யார்? இது எவ்வாறு கடலினுள் மூழ்கியது? போன்ற கேள்விகளுக்கு இதுவரை பதில் கிடைக்காமலேயே உள்ளது*



கிமுரா மசாகீ




## கடலின் ஆழ்பகுதியில் யானை

1991 ஆம் ஆண்டு, ஜப்பானியரான கடல்வாழ் உயிரின ஆய்வு விஞ்ஞானி கிமுரா மசாகீ என்பவர் சிறிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் சென்று ஜப்பானுக்கு அண்மையில் ஒக்கினாவா தீவுக்கு அருகில் உள்ள ஆழ்கடற் பகுதியில் தமது ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் 100 மீற்றர் ஆழத்தில் இருந்தார். ஒக்கினாவா தீவுக்கு அருகில் உள்ள கடல் வலயம் மற்றும் சிறிய தீவுகள் என்பனவற்றை ஆய்வு செய்து வரைபடம் வரைவதே அவருக்கு அளிக்கப்பட்ட பணியாகும். இவ்வாறு ஒருநாள் ஆழ்கடலில் நீர்மூழ்கியின் றொபோ கைகளைப் பயன்படுத்தி, அசாதாரணமான, இனம்புரியாத உருவம் ஒன்றினை அவர் பரீட்சித்துக்கொண்டிருந்தார். அந்த உருவம் அவரைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது. அதாவது, 600 மீற்றர் ஆழ்கடல் பகுதியில் படிமப்புதைவாக இருந்த யானையின் கால்களின் எலும்பே அவருக்குக் கிடைத்தன.

ஜப்பானுக்கு அண்மித்த ஆழ்கடற் பகுதியினை ஆய்வு செய்யும்போது, அரியவகை புராதனச் சின்னங்கள் கிடைக்கக் கூடும் என்று மசாகீ கூறியிருந்தார். எவரும் அதனைப் பொருட்படுத்தவே இல்லை. யானையின் எலும்பொன்று கண்டுபிடிக்கப்பட்டவுடன், அனைத்தும் மாறிவிட்டன. இந்தக் கண்டுபிடிப்பு பல கேள்விக் கணைகளையும் உருவாக்கிவிட்டது. பண்டைய காலத்தில் யானைகள் நீர்வாழ் உயிரினமாக இருந்தனவா? ஆழ்கடற் பகுதியில் இவை வசித்து வந்தனவா? என்பன இவை சம்பந்தமாக எழுப்பப் பட்ட கேள்விகளாகும்.

## கிமுரா மசாகீ

கிழக்கு ஜப்பானின் யொக்கோஹாமா நகரில் கிமுரா மசாகீ பிறந்தார். ஆழ்கடல்பகுதி குறித்தும், அங்கு வாழும் உயிரினங்கள் குறித்தும் அதில் உள்ள மர்மங்கள் குறித்தும் ஆராய்வதில் சிறு வயது முதல் மசாகீ பேரார்வம் கொண்டிருந்தார். இந்த ஆர்வமே அவரை ஜப்பானில் பெரிதும் மதிக்கப்பட்ட டோக்கியோ பல்கலைக்கழகத்தில் கடல் உயிரியல்



விஞ்ஞானம் குறித்துக் கற்கும் ஆர்வத்தினை ஏற்படுத்தியது. இதனாலேயே, அவர் கடல் உயிரியல் ஆய்வு விஞ்ஞானியானார். ஜப்பானின் நிலஅளவை திணைக்களத்துடன் இணைந்து ஜப்பானின் பூகோளவியல் ஆய்வொன்றினை மேற்கொண்டு ஜப்பானின் தீவுகளை வரைபடமாக்கும் பொறுப்பு 1970 ஆம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்டது.

ஒக்கினாவா தீவுக்கு அண்மித்த கடற் பகுதியில் பண்டையகால புதைபடிமங்கள் கிடைத்தமை பற்றிய தகவல்கள், செய்திகளை ஆய்வினை ஆரம்பிக்கும்போது மசாகீ அறிந்துகொண்டார். ஆய்வுக்கு மத்தியில் அவர், அந்த பண்டையகால புதைபடிமங்களைத் தேடிச் சென்றார். அவற்றைக் கண்காணித்தார். அதுபற்றிய கருத்துக்கள் கோட்பாடுகளை வெளிப்படுத்தும் நூல் ஒன்றையும் வெளியிட்டார். கடலினுள் மூழ்கிப்போன பண்டைய நகரம் ஒன்று ஆழ்கடல் பகுதியில் இருப்பதாக அவர் தகவல் ஒன்றினை அந்நூலில் வெளியிட்டுள்ளார். மசாகீயின் கருத்துக்களை உறுதிப்படுத்தும் சான்று அக்காலப்பகுதியில் கிடைக்கவில்லை. இதனால், அவரது கருத்துக்களை எவரும் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

## மயிர்க் கூச்செறியும் பிரமிட்

விடயங்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில்தான், மயிர்க் கூச்செறியும் விதத்திலான பிரபல சான்று ஒன்று கிடைக்கப்பெற்றது. தொலைக்காட்சி நிறுவன சுழியோடிகள் சிலருக்கே இந்தச் சான்று கிடைத்தது. அவர்கள் ஆழ்கடல் பகுதியில் உள்ள விடயங்கள் குறித்து ஆராய்ச்சி நிகழ்ச்சியொன்றினை







நடத்திக்கொண்டிருந்தனர். கிஹாச்சிரோ அரக்காத்தே என்பவர் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். பிரமாண்டமான கட்டடம் ஒன்றின் புராதனச் சிதைவுகள் அவர்கள் காட்சிப்படுத்திய படங்களில் பதிவாகிக்கொண்டிருந்தன. ஒக்கினாவா தீவுக்கு அருகில் உள்ள 'யொனாகுனி' என்ற சிறிய தீவுக்கு அருகில் உள்ள ஆழ்கடல் பகுதியிலேயே, இந்த புராதன சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

"இந்த வீடியோ காட்சிகளைப் பார்த்ததும் நான் வியப்படைந்தேன். முதலில் இதனை என்னால் நம்ப முடியவில்லை. யாரோ வேடிக்கை காட்டுகிறார்கள் என்றே நினைத்தேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org












அது ஒரு பிரமாண்டமான அடுக்கு மாடிக் கட்டடம். பிரமிட் போன்றது. அது ஒரு பண்டைய நகரம் ஒன்றின் சிதைவுகள் என்றே நான் கருதினேன். இதுபற்றி, மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது'' என்று கிஹாச்சிரோ அரக்காத்தே குறிப்பிட்டார். மசாகீயும் இந்த விடயம் பற்றி அறிந்தார்.

## நகரத்தினைத் தேடி மசாகீ பயணம்

அரக்காத்தே குழுவின் கண்டுபிடிப்பின் பின்னர் 1997 மார்ச் 21 ஆம் திகதி சிறிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் யொனாகுனி கடல் பிரமிட்டினைக் கண்டுபிடிக்க மசாகீ ஆழ்கடலுக்குள் சென்றார். 'யொனாகுனி கடல் பிரமிட்' என்றே அப்பொழுது அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருந்தது. அங்கு முக்கோண முப்பரிமாண கட்டடத்தினை பிரமாண்டமான அளவில் மசாகீ கண்டார். அதன் நீளம் 290 மீற்றர். உயரம் 26 மீற்றர். அகலம் 120 மீற்றர்.
பவளப்பாறைகள் மற்றும் கடல் தாவரங்கள் பலவற்றினால் அது மறைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் 700 தடவைகள் யொனாகுனி கடல் பிரமிட்டினை ஆய்வு செய்வதற்காகக் கடலின் ஆழ்பகுதிகளுக்குச் சென்றார். அந்த ஒவ்வொரு முறையும் அவர் சான்றுகளைத் தேடினார். இது யாருடைய பிரமிட் யாரால் கட்டப்பட்டது? இது எவ்வாறு கடல் ஆழத்துக்குள் மூழ்கியது? போன்ற வினாக்களுக்கு விடை தேடினார்.

## 'யொனாகுனி' பிரமிட்

புதைபொருள் ஆய்வு உபகரணங்களைப் பயன்படுத்தி மசாகீ மிகவும் அவதானமாக கற்களினாலான படிக்கட்டுகளின் படிம எச்ச மாதிரிகளைப் பெற்றுக்கொண்டார். மெல்லிய கற்துண்டுகள் சிலவற்றை நுணுக்குக்காட்டியினூடாக ஆய்வுசெய்தார். யொனாகுனி தீவுப்பகுதிக்குரிய மண்ணைக் கொண்டே இந்த கற்படிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவை 15 மில்லியன் முதல் 20 மில்லியன் ஆண்டுகள்வரை பழமை வாய்ந்தவை என்பதும் தெரியவந்துள்ளது என்று மசாகீ சுட்டிக்காட்டுகின்றார். பிரமிட்டை மூடியிருக்கும் பவளப்பாறைகளைப் பரிசோதித்தபோது, அவை 2,000 முதல் 3,000 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்றும் அவர் கூறுகின்றார்.

## 3 மாடிகள்

பிரமிட் 3 மாடிகளைக் கொண்டதுடன், வடக்கிலும் தெற்கிலும் இரண்டு கற்படி வரிசைகள் உள்ளன. பிரதான படிக்கட்டுக்களுக்கு புறம்பாக இவை அமைந்துள்ளன. பிரமிட்டின் உச்சியில் முக்கோண வடிவிலான தடாகம் ஒன்று உள்ளது. இந்த தடாகத்திற்கு அருகில் நீர்ப்பொய்கை ஒன்று இருக்கின்றது. இது குடிநீர் பாவனைக்காக சேகரிக்கப்பட்ட பொய்கையாக இருக்கலாம் என்று மசாகீ கருதுகின்றார். பண்டையகால ஒக்கினாவா அரச மாளிகைகளிலும் [illegible] நீர்ப்பொய்கைகளும் நிர்மாணிக்கப் பட்டிருந்ததாக மசாகீ கூறுகின்றார். இந்த பிரமிட் மனிதனின் படைப்பா? அல்லது இயற்கையின் படைப்பா? என்பதனை அறிய தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1997 இல் மேல் மாடிக் கட்டடத்தில் இந்த சின்னங்கள் கிடைத்தன. 'குசாபி' என்ற கற்களிலான ஆயுதத்தினால் இந்த அடையாளச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. பண்டைய காலத்தில் சிற்பக் கலைஞர்கள் சிற்பங்களை வடிக்க இந்த ஆயுதத் தினைப் பயன்படுத்தியிருக்கலாம். இதன்படி, இந்தப் பிரமிட் மனிதனின் நிர்மாணிப்பு என்ற விடயம் உறுதிப் படுத்தப்பட்டது. சிற்பக் கலைஞர்கள் பயன்படுத்திய துளைகளையும் அவர் கண்டுபிடித்தார்.

## ராட்சத ஆமைச் சிலை

பிரமிட் உச்சியில் வடிக்கப்பட்டிருந்த இரண்டு ஆமைச் சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை 7 முதல் 8 மீற்றர் உயரத்தைக் கொண்டவை. சம அளவுடையவை. இவை பசுபிக் தீவில் உள்ள மோய் உருவச் சிலைகளை ஒத்ததாக உள்ளன. இதன்படி, பசுபிக் தீவின் மோய் சிலைகளை உருவாக்கிய மர்ம மனிதர்கள் இந்த பிரமிட்டை நிர்மாணிப்பதில் பங்காற்றியுள்ளனர். அல்லது இந்த ஆமைச் சிலையை வடிவித்தவர்கள் பசுபிக் தீவின் மோய் சிலைகளை வடிவமைத்தவர்களிடம் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆழ்கடற் பகுதியில் இருக்கும் பிரமிட் உச்சியில் வடிக்கப்பட்டுள்ள ஆமைகளின் உதடுகளும் வாய்ப்பகுதியும் 30 சென்ரிமீற்றர் கொண்டவை. இவை வியத்தகு முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கண்களின் இமைகள் கூட மிகவும் நுட்பமான முறையில் வடிவமைக்கப் பட் டுள்ளதாக மசாகீ கூறுகின்றார்.

## பிரமிட் ஒரு மர்மம்

மிகப் பிரமாண்டமான இந்த பிரமிட் கடலில் மூழ்கியிருக்கக் கூடும் என்று மசாகீ குறிப்பிடுகின்றார். அட்லாந்திஸ் நகரம் கடலுக்குள் மூழ்கிப்போனது போன்று இச்சம்பவமும் நடந்திருக்கலாம். பூகம்பம் அல்லது கடல்கோள் அனர்த்தம் இதற்கு காரணமாக அமைந்திருக் கலாம் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஆனாலும், பெரும்பாலான விஞ்ஞானிகள் யொனாகுனி பிரமிட் பற்றி பெரும் ஆர்வம் காட்டுவதாக இல்லை. இது இயற்கையாக உருவான ஒன்று என்று அவர்கள் கருதுகின்றனர். இந்தப் பிரமிட்டின் அருகாமையில் இதுவரை எந்த மனித எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால், இந்த பிரமிட்டைக் கட்டியது யார் என்பதும் புரியாத புதிராகவே உள்ளது என்று மசாகீ சுட்டிக்காட்டுகின்றார். இதனாலேயே அவர் இன்னும் யொனாகுனி பிரமிட் பற்றிய விடைகாண முடியாத மர்மங்களை அறிய தமது ஆய்வுகளைத் தொடர்ந்துகொண்டிருக்கிறார். (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்லோவேகியா


தேசிய இலச்சினை

**அரசு:** நாடாளுமன்ற ஜனநாயகம்.

**சுதந்திரம்:** ஒஸ்ட்ரியா- ஹங்கேரி நாட்டிடம் இருந்து செக்கொஸ்லோ வேகியாவாக சுதந்திரமடைந்தது-28 ஒக்டோபர் 1918. செக்கொஸ்லோ வேகியாவிடமிருந்து 1993 ஜனவரி 1.

**தேசிய பெயர்:** ஸ்லோவென்ஸ்கா ரிபப்ளிக்கா.

**ஜனாதிபதி** (2004): ஐவன் கெஸ்பரோவிக்.

**பிரதமர்** (2012): றொபேட் ஃபிகோ.

## புவியியல்

மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவேகியாவின் வட மேற்கில் செக் குடியரசும் வடக்கில் போலந்தும் கிழக்கில் உக்ரைனும் தெற்கில் ஹங்கேரியும் தென்மேற்கில் ஒஸ்ட்ரியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. கரடுமுரடான


ஸ்லோவேகிய ஜனாதிபதி மாளிகை

மலைத் தொடர்களைக் கொண்டு விளங்குவதோடு, கனிமவளம் நிறைந்த நாடாகவும் திகழ்கின்றது. பாரிய அடர்ந்த காடுகளையும் விசாலமான மேய்ச்சல் புல்நிலங்களையும் கொண்டுள்ளது. கார்பேதியன் மலைத்தொடர் முக்கியமானதொரு தரைத்தோற்றமாகும். தென் பிராந்தியம் முழுவதும் தாழ் நிலங்களைக்கொண்ட பிரதேசமாகும். டன்யூப், மொராவா, ஹோர்நட், ஹ்ரோன் மற்றும் வாஹ் என்பன இந்நாட்டில் பாயும் முக்கிய நதிகளாகும். ஸ்லோவேகியாவில் பல இயற்கை ஏரிகள் உள்ளன.

**மொத்தப்பரப்பு:** 18,859 ச.மைல் (48,845 ச.கி.மீற்றர்).

**நிலப்பரப்பு:** 18,842 ச.மைல் (48,800 ச.கி. மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 8 பிராந்தியங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ப்ராடிஸ்லாவா.

**ஏனைய பெரிய நகரம்:** கொஸிஸ்.

**உயர் மலைச்சிகரம்:** ஜெர்லெக் பீக் (2,664 மீற்றர்).

**தாழ்மையம்:** பொட்ரொக் நதி.

**சனத்தொகை** (2010): 54,70.306.

**நாணயம்:** கொருனா.

**மொழிகள்** (2010): ஸ்லோவெக் 84% (அரச கரும மொழி), ஹங்கேரியன் 11%, ரோமர் 2%, உக்ரைன் 1%.

**இனக்குழுவினர்கள்** (2001): ஸ்லோவெக் 85.8%, ஹங்கேரியன் 9.7%, ரோமா 1.7%, ருதேனியன்/ உக்ரேனியன் 1%, ஏனைய மற்றும் இனங்காணாதோர் 1.8%.

**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 69%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 11%, கிரீக் கத்தோலிக்கம் 4%, சமயமற்றோர் 13%.

**எழுத்தறிவு** (2001): 99.6%

**இணையத்தளக் குறியீடு:** . sk

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +421


Bojnice கோட்டை

**தேசிய கீதம்**

Nad Tatrou sa blýska
Hromy divo bijú Thunders
Zastavme ich, bratia... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

தற்போது ஸ்லோவேகியா என அழைக்கப்படும் நாட்டில் 6 ஆம் நூற்றாண்டில் ஸ்லேவிக் ஸ்லோவெக் இனத்தவர்கள் குடியேறினர். 9 ஆம் நூற்றாண்டில் மொராவியன் பேரரசர் இப்பிராந்தியங்களை ஐக்கியப்படுத்தினார். கி.பி. 907 இல் ஜேர்மனியர்கள் மொராவியன் ராச்சியத்தை ஆக்கிரமித்த பின்னர் அந்த அரசு வீழ்ச்சியடைந்தது. அதனைத் தொடர்ந்து 10 ஆம் நூற்றாண்டில் ஸ்லோவேகியா ஹங்கேரியின் கட்டுப்பாட்டின்கீழ் வந்து, சுமார் 10 நூற்றாண்டுகள் அதன் ஆட்சியின் கீழ் இருந்தது. முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து ஸ்லோவேகியா மற்றும் பொஹிமியா, மொராவியா, சைலீசியாவின் ஒரு பகுதியுடன் இணைந்து 'செக்கொஸ்லோவேகியா' என்ற பெயரில் புதிய அரசை உருவாக்கியது. 1939 மார்ச் மாதம் ஜேர்மனியின் நாசி படைகளின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. 1945 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யா ஸ்லோவேகியாவை ஜேர்மனியிடமிருந்து விடுவித்தது. 1948 இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தது. செக்கொஸ்லேவிய கூட்டுக்குடியரசு 1992 இல் கலைக்கப்பட்டதை அடுத்து, 1993 ஜனவரி முதலாம் திகதி செக் மற்றும் ஸ்லோவேகியா ஆகிய இரு நாடுகள் உதயமாகின.








ஜனாதிபதி


பிரதமர்

## காலநிலை

பொதுவாக, மிதமான வெப்பத்தைக்கொண்ட கோடையும் கடுங்குளிரும் கருமுகில் கூட்டமும் பனிப்படிவுகளைக் கொண்ட மாரியும் நிலவும் ஸ்லோவேகியாவில், மலைப்பிரதேசங்களில் கடுமையான பனிப்படிவு வீழ்ச்சி நிகழும். நாட்டில் வெப்பக் காலநிலை நிகழ்வது மிக மிக அபூர்வமாகும். நாட்டின் வருடாந்த வெப்பநிலை 9°C க்கும் 10°C இற்கும் இடைப்பட்டதாகும். சராசரி கோடைகால வெப்பநிலை 20°C வரை காணப்படும்.


ஸ்லோவேகிய நாடாளுமன்றம்

## கலாசாரம்

முன்னேற்றகரமான ஸ்லோவேக் கலாசாரமானது, உயர்ந்த பாரம்பரிய நாட்டுப்புறக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றது. அதற்கு முக்கிய காரணம்: ஸ்லோவேகியாவின் புவியியல் நிலையே ஆகும். ஒஸ்ட்ரியா, ஜேர்மனி, ஹங்கேரி ஆகிய நாடுகளின் கலாசார செல்வாக்கும் காணப்படுகின்றது. இக்கலாசாரத்தின் பிரதிபலிப்புகளை ஸ்லோவேகியாவின் ஓவியம், இலக்கியம், இசை என்பனவற்றில் அதிகம் காணலாம்.



## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (1998): பிரதான தொலைபேசி பாவனையாளர்கள்: 1,934,558; செல்லிடத் தொலைபேசிகள்: 736,662. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 15, FM 78, SW 2, **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1998): 38. **இணையத்தள வழங்குனர்கள்:** 6; இணையத்தளப் பாவனையாளர்கள்: 700,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2007): மொத்தம் 3,668 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** மொத்தம் 42,717 கி. மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து:** டன்யூப் நதியில் 172 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** ப்ராடிஸ்லேவா, கொமர்னோ. **விமான நிலையங்கள்** (2002): 37.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 30%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், கிழங்கு வகைகள், பழங்கள், பன்றிகள், மாட்டுப்பண்ணைப் பொருட்கள், கோழிப்பண்ணை,


தலைநகரின் ஒரு பகுதி

காட்டு வள உற்பத்திகள். **கைத்தொழில்கள்:** உலோக உற்பத்திகள், உணவும் பான வகைகளும், மின்சாரம், எரிவாயு, எண்ணெய், ரசாயனப்பொருட்கள். இயற்கை வளங்கள்: வெண்கலம், நிலக்கரி, இரும்புருக்கு, செம்பு மற்றும் வளமான நிலம். **பிரதான ஏற்றுமதிகள்** (2009): வாகன வகைகள் 25.9%, இயந்திரங்களும் மின் உபகரணங்களும் 21.3%, அடிப்படை உலோகங்கள் 14.6%. **பிரதான இறக்குமதிகள்** (2009): இயந்திரங்களும் போக்குவரத்து சாதனங்களும் 41.1%, நடுத்தர உற்பத்திப் பொருட்கள் 19.3%. **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஜேர்மனி, செக்குடியரசு, ஒஸ்ட்ரியா, இத்தாலி,போலந்து, ஐக்கிய அமெரிக்கா, ஹங்கேரி, ரஷ்யா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- Bojnice கோட்டை
- Demänováli குகை
- ஸ்லோவேகியா தேசிய நூதனசாலை


Digitized by Noolaham Foundation

# மகாவலி நீர்த்தேக்கங்கள்



போவதென்ன

அம்பன் கங்கைக்கு குறுக்காக, கொங்றீட் அணையினாலும் மிகுதிப் பகுதியை மண்ணாலும் சேர்ந்து இணைக்கப்பட்டதே போவதென்ன அணையாகும். சுது கங்கையின் ஊடாக வரும் மகாவலி நீர் மற்றும் அம்பன் கங்கையில் பெருகி வரும் நீரினை சேகரித்து மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது. 382 கி.மீற்றர் பிரதேசம் இதனால் வளமடைகின்றது. இதன் அணையின் நீளம் - 327 மீற்றர். உயரம் - 30 மீற்றர். இதன் நீர் கொள்ளளவு - 56.25 மில்லியன் கனமீற்றராகும்.



பொல்கொல்ல

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பப்பகுதிதான் பொல்கொல்லை அணையாகும். மகாவலி நீரினை ரஜரட்டப் பகுதிகளுக்குத் திருப்பும் அணையாக இது விளங்குகின்றது. மகாவலி ஆற்றின் குறுக்காக 146 மீற்றர் நீளத்துடன், 15.4 மீற்றர் உயரத்துடன், கொங்றீட் அணையினால் உருவாக்கப்பட்டுள்ளது. தேவையான சந்தர்ப்பங்களில் நீர் கீழே வருமாறு அணை உருவாக்கப்பட்டுள்ளது. வளமடையும் பகுதி 738 கி.மீற்றர்களாகும். 4.1 மில்லியன் கனமீற்றர் நீர் கொள்ளளவைக் கொண்டது.




ரந்தெனிகல

மகாவலி நீர்த்தேக்கங்களில் ரந்தெனிகல நீர்த்தேக்கம் மிகவும் பெரிய நீர்த்தேக்கமாகும். இந்நீர்த்தேக்கத்தின் மத்தியில் பல தீவுகள் உள்ளன. இதனால், அழகிய சூழலைக் கொண்டதாக விளங்குகின்றது. 550 கி.மீற்றர் வரையிலான பிரதேசம் இதன்மூலம் வளம் பெறுகின்றது. அணையின் நீளம் 485 மீற்றர். உயரம் 94 மீற்றர். இதன் நீர் கொள்ளளவு 861.4 மில்லியன் கனமீற்றராகும்.



ரன்தெம்ப நீர்த்தேக்கம்

மகாவலி நீர்த்தேக்கங்களில் ரன்தெம்ப நீர்த்தேக்கம் மிகவும் சிறியது. மகாவலி நீரினாலும் உமா ஓயா நீரினாலும் வளமடைகின்றது. இது முழுவதுமாக கொங்றீட் நிர்மாணிப்பாகும். இந்நீர்த்தேக்கத்திற்கு 3 கி.மீற்றர் தாழ்வாக ரந்தெனிகல நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 22 மில்லியன் கனமீற்றர் நீர் கொள்ளளவு கொண்ட இதன் உயரம் 41.5 மீற்றராகும். அணையின் நீளம் 420 மீற்றர். 1,095 சதுர கிலோமீற்றர் பகுதிகள் இதனால் வளமடைகின்றன.



மேல் கொத்மலை

அண்மையில் மகாவலி நீர்த்தேக்கங்களில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கம் மேல் கொத்மலை நீர்த்தேக்கமாகும். கொத்மலை ஓயாவை குறுக்கீடு செய்து நிர்மாணிக்கப் பட்டுள்ள இந்த நீர்த்தேக்கம் 35.3 மீற்றர் உயரத்தையும் 180 மீற்றர் நீளத்தையும் கொண்டது. இதன்மூலம் 180 மெகாவோட் மின்சாரத்தை தயாரிக்க முடியும் [illegible] கின்றது. பாரிய சுரங்க நீர் வலையமைப்பினூடாக நீர் எடுத்துச் [illegible]



விக்டோரியா நீர்த்தேக்கம்

விக்டோரியா நீர்த்தேக்கம் இலங்கையின் உயரமான அணைக்கட்டினைக் கொண்ட நீர்த்தேக்கமாகும். 122 மீற்றர் உயரம் கொண்ட இது முழுமையான கொங்றீட் அமைப்பாகும். 210 மெகாவோட் மின்சக்தி பிறப்பாக்க ஆற்றல் கொண்டது. அதிகளவு சமூக அழுத்தத்தினை ஏற்படுத்திய நீர்த்தேக்கமாகும். இத்திட்டத்தின் காரணமாக, சுமார் 6 ஆயிரம் குடும்பங்கள் [illegible]ப்படுத்தப்பட்டன. இதனால், 1,891 சதுர கி.மீற்றர் பகுதி வளமடைவதுடன், 722 [illegible] கனமீற்றர் நீர்க்கொள்ளளவையும் கொண்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I

பெயர்: ................................................ நேரம்: 45 நிமிடங்கள்


★ *01 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

★ *1ஆம், 2 ஆம் வினாக்களில் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.*

01) எரிபொருள் ⟶ விரைவு ⟶ வெளிநாடு




02) சுவை ⟶ இறக்குமதி ⟶ ஆரோக்கியம்



★ *3 ஆம், 4 ஆம் வினாக்களில் ஒத்த உருக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.*


03)



A. B. C. D.

1. A,C 2. B,D 3. A,B

04)




A. B. C. D.


1. A,B 2. C,B 3. A,D

★ *5 ஆம், 6 ஆம் வினாக்களில் உருவைப் பூரணப்படுத்தத் தேவையான பகுதியைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

05)



06)



★ *தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து 7 ஆம், 8 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

புன்னகை செய்யும் பூக்கள் போதாது
புண்ணியம் செய்யும் பூமி வேண்டும்!
சிலையான கற்கள் போதாது
சுவையான கல்வி வேண்டும்!
சுட்டெரிக்கும் சூரியன் போதாது
சுகமான நிலவு வேண்டும்!

07) இக்கவிதையிலுள்ள 'புண்ணியம் செய்யும் பூமி வேண்டும்' என்பதன் கருத்து;

1. பாவம் செய்யும் மனிதர்கள் வேண்டும்.
2. அதர்மம் செய்யும் பூமி வேண்டும்.
3. தர்மம் செய்யும் மக்கள் வேண்டும்.


08) இக்கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரெச்ச சொல் ஒன்று;

1. பூக்கள் 2. புண்ணியம் 3. சிலையான

09) கீழ்வரும் உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது, தெரியும் சரியான உருவைத் தெரிவுசெய்க.




10)



பின்வரும் உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன?


1. 17 2. 15 3. 16

11) கனவுருவை அமைக்கத்தக்க உருவைத் தெரிவுசெய்க.






12)




எண்கோலத்தை அவதானித்து, வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.

1. 14 2. 8 3. 17


13) குமாரிடம் வயதைக் கேட்டால் நேரடியாகச் சொல்லமாட்டான். எனது வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அந்த இரு எண்களையும் இடம் மாற்றிப் போட்டால், எனது வயதில் ஒன்பது குறைந்துவிடும் என்றான். அப்படியானால், குமாரின் வயது என்ன?

1. 45 2. 54 3. 63


14) 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்ற பழமொழியின் கருத்தைத் தெரிவுசெய்க.

1. எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.
2. விடாமுயற்சி பலன் தரும்.
3. சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது.

15) தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்புபடுத்தும்போது, கிடைக்கும் உருவைத் தெரிவுசெய்க.



16) பொருட்களை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும்போது, அது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருட்களைப் பக்கத்திலிருந்து பார்க்கும்போது, அது தோன்றும் விதத்தினைக் காட்டும் சரியான உருக்களை தெரிவுசெய்க.



★ *அடைப்புக்களில் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கு ஏற்ப இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 4 | | 8 | 18 | |
| 1 | 3 | 5 | 10 | | |
| 11 | | 7 | | | A |
| 13 | 15 | | | | B |

17) எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?

1. 22 2. 26 3. 24

18) எழுத்து B எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?

1. 23 2. 19 3. 21

19) இரு பகுதிகளும் சமனற்று இருக்கும் நிரையைத் தெரிவுசெய்க.

1. 4087R40S - 4087R40S
2. 5STB8RT - STB85RT
3. ★#.4BRRA - ★#.4BRRA

20) பிழையான கோவையைத் தெரிவுசெய்க.

1. 30+6÷2 = 18
2. 6+ 3x2 = 18
3. 29+7-2 = 18

21) ஓர் ஓட்டப் போட்டியில் 5 பிள்ளைகள் போட்டியை முடித்த விதம் பின்வருமாறு:

| | |
|---|---|
| லவன் | - 6 நிமிடம் |
| முரளி | - போட்டியை முடிக்கவில்லை |
| ஜெகன் | - 10 நிமிடம் |
| நந்தன் | - 4 நிமிடம் |
| கஜன் | - 8 நிமிடம் |

அவர்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்த ஒழுங்குமுறை யாது?

1. முரளி, நந்தன், லவன், கஜன்.
2. நந்தன், லவன், கஜன், ஜெகன்.
3. ஜெகன், கஜன், லவன், நந்தன்.

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நல்ல விடயங்களில் ஆசைகொள்வது சிறந்தது

## கல்வி

## முகாமைத்துவம் - 120

### கற்றலுக்கான ஆலோசனைகள்

'ஆசை' என்பது எல்லோருக்கும் ஏற்படுகின்றது. ஆனால், அதை அளவோடு வைத்துக்கொள்வதுதான் எமக்கு நன்மையானதாகும். ஆசைப்படுவதில் எந்தவித குற்றமும் இல்லை. ஆனால், எதில் ஆசைப்பட வேண்டும் என்பதை முடிவு செய்து ஆசைப்பட வேண்டும். நல்ல விடயங்களில் ஆசை கொள்வதில் தவறில்லை. ஆனால், தீய விடயங்களில் ஆசைகொள்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.



இன்றைய மாணவர்கள் வழிதவறிச் செல்வதற்கும் அதன் விளைவுகளை எதிர்கொள்வதற்கும் காரணம்: தம்மால் அடையமுடியாத ஒன்றுக்கு ஆசைப் படுவதும் அதை அடைந்துகொள் வதற்காக நல்ல விடயங்களை இழப்பதுமே ஆகும். இதன் போது, அவர்களது இலட்சியங்களும் கல்வி நடவடிக்கைகளும் பாதிப்படைகின்றன. எல்லைமீறிய ஆசையானது, ஏனைய நன்மையான விடயங்களை முடக்கி விடும். ஆகவே, எத்தகைய விடயங்களில் ஆசைப்பட வேண்டும்?, அவற்றில் எதை அடைந்து கொள்வதற்காக நாம் உழைக்க வேண்டும்? என்பன தொடர்பில் மாணவர்கள் தம்மை வரையறை செய்து கொள்ள வேண்டும். இதுவே தீய ஆசைகளை அடக்கிக்கொள்ள சிறந்த உத்தியாகும்.



நன்மை தரும் விடயங்களில் அதிக ஆசை வைக்க வேண்டும் என்ற ஈடுபாடானது, அத்தகைய ஆசைகளை அடைந்து கொள்ள உந்துதலாக இருக்கும். அத்துடன், நன்மைகளை வரவழைக்கவும் கற்றலை மேம்படச் செய்து- பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறவும் உதவும். அவ்வாறே, கல்வி அறிவை மேம்படுத்த உழைக்க வேண்டும், கல்வி ரீதியான சாதனைகளைச் செய்திட வேண்டும் போன்ற ஆசைகள் மாணவர்களிடையே அதிகமாக இருக்க வேண்டும். இவை மாணவர்களுக்கு நன்மை அளிக்கும் ஆசைகளாகும்.

மாறாக, தீய பழக்கங்கள் மீதான ஈடுபாடும் ஆசையும் மாணவர்களை தீயவழிக்கே இட்டுச் செல்லும். தீய பழக்கவழக்கங்களை உடைய மாணவர்களுடன் நட்புக்கொள்வதால், மாணவர்கள் வழி கெட்டுப் போக நேரிடும். தீயவழிகளில் செல்லும்போது, தீய ஆசைகள் மனதில் தோன்றும். இதனூடாக, வேண்டப்படாத விளைவுகளே வந்து சேரும். இதனால், சீர்கெடுவது எமது நடத்தையும் பண்புகளுமே ஆகும். அத்துடன், தீய செயல்களில் அதிக ஆசைகொள்ளும்போது, ஏற்படும் பாதகமான விளைவுகளால் எமது மனம் பாதிப்படையும். இதனால், மனஉளைச்சல்களுக்கும் நெருக்கீடுகளுக்கும் ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, எமது ஆசைகளை ஒழுங்கமைக்கும்போது, பகுத்தறிவுடன் ஆராய வேண்டும். ஆசைப் படும் விடயம் நல்ல விடயமாகவும் இருக்க வேண்டும். அப்போது தான், நாம் நல்ல விளைவுகளை அடையக்கூடியதாகவும் சாதனைகள் புரியக்கூடியதாகவும் இருக்கும்.

(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

---

## துஷாரா கலைவட்டம் - 2012

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு பிரமாண்டமான சித்திரப் போட்டி)**

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்தவொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்கு மேல்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின், அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடம் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாம் இடம் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடம் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

**வழங்கப்படும் பரிசில்களின் எண்ணிக்கை:**

- கிண்ணம்-68, தங்கப்பதக்கம் - 188, வெள்ளி - 15, வெண்கலம் - 15, பரிசுகள்- 2,300, சான்றிதழ்கள் 5,000. Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
  (இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
- சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும். சித்திரங்களை அனுப்பி வைத்ததன் பின்னர், அவற்றின் பூரண உரிமை துஷாரா கலைவட்டம் மற்றும் எக்ரோன் நிறுவனத்திற்கே உண்டு.
- வெற்றியாளர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான இரண்டு மண்டபங்களிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 வெற்றியாளர்களுக்கு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்து பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2012 ஒகஸ்ட் 31.**

சித்திரங்களை அனுப்பும்போது இங்குள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தையோ அல்லது அதன் நிழற்பிரதியையோ பயன்படுத்தலாம். சித்திரங்களை துஷாரா கலைவட்டத்திற்கோ அல்லது எக்ரோன் (கலர் கிராஃப்ட்) நிறுவனத்திற்கோ தபாலில் அனுப்பிவைக்கலாம் அல்லது நேரடியாகவும் கையளிக்கலாம்.

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு:** 011-4962520,071-4483704.

---

## துஷாரா கலைவட்டம்
## THUSHARA KALA KAVAYA

அகில இலங்கை சித்திரப் போட்டி-2012

Acron• All Island Art Competition

மாதிரி விண்ணப்பப்படிவம் Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex : பெண் Female ☐ ஆண் Male ☐

சொந்த முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ........................ | ........................ | ........................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் | திகதி | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் |
| Applicant's Signature | Date | Parents/ Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron COLSTAR ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் ப
# ப டர்ந்தி
# ளிக்கா

*பால் போன்று வெண்மை நிறத்தில் போர்த்தப்பட்டிருக்கும் பனி மலைகளைப் பார்ப்பதற்கு அனைவரும் விருப்பம் கொள்வர். உலகின் வட, தென் துருவப்பகுதிகளைச் சேர்ந்த நாடுகளைப் பொறுத்தவரையில், அங்கு இவ்வாறுதான் அதிகளவான பனிப் பொழிவுகள் காணப்படும். அந் நாடுகளில் குளிர்காலம் ஆரம்பமாகி, நாட்கள் செல்லச் செல்ல பனியின் தீவிரமும் அதிகமாக இருக்கும். இந்த நாடுகளில் வசிப்போருக்கு குளிர்காலம் என்பது மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய காலப்பகுதியாகவே காணப்படுகின்றது. ஆக, இந்தக் கட்டுரையினூடாக, மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் குளிர்காலத்தை எதிர்கொள்ளும் விதம் பற்றியும் இக்காலகட்டத்தில் நிலவும் மாற்றங்கள் பற்றியும் பார்ப்போம்*

## பருவகால மாற்றத்தினால் ஏற்படும் பனி

இலையுதிர்காலம், வசந்தகாலம், குளிர்காலம், கோடைகாலம் என பருவகாலங்கள் மாறி மாறி வருவதற்கு இரண்டு விடயங்கள் காரணமாக உள்ளன. இதில் ஒரு காரணம்: பூமி தனது அச்சில் 23 $^{1/2}$ பாகை சாய்ந்திருப்பதாகும். இரண்டாவது காரணம்: பூமி தனது அச்சில் நீள் வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றிக்கொண்டிருப்பதாகும். இதனால், பூமியின் அனைத்துப் பகுதிகளுக்கும் ஒரே அளவில் சூரியஒளி கிடைக்காது விடுகின்றது. ஆனால், அச்சின் அண்மையில் உள்ள நாடுகளுக்கு வருடம் முழுவதும் நன்கு சூரிய வெளிச்சம் கிடைக்கும். சுற்றுப் பாதையின் இடைவெளி அதிகரிக்க அதிகரிக்க சூரிய வெளிச்சமும் குறைவடையும். இதனால், துருவப்பகுதிகளில் தெளிவான பருவ வேறுபாட்டினைக் காண முடியும். இங்கு குளிர்காலத்தில் அதிகளவான பனிப்பொழிவு காணப்படும். குளிர்காலத்தில் சூரியஒளி வெகு குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். வட துருவப் பகுதிகளில் உள்ள நாடுகளுக்கு டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் குளிர்காலமாக இருக்கின்றது. தென் துருவப்பகுதி நாடுகளுக்கு ஜூன், ஜூலை, ஒகஸ்ட் ஆகிய மாதங்களில் குளிர்காலம் நிலவுகின்றது.


## குளிர்காலத்தில் சுற்றுப்புறச்சூழல்



குளிர்காலம் ஆரம்பித்தவுடனேயே, செடி-கொடி உட்பட தாவரங்கள், மலைப்பகுதிகள் அனைத்தும் பனிப் பொழிவு காரணமாக பனியால் மூடப்பட்டுவிடும். வெப்பகாலங்களில் காணக்கிடைக்கும் பறவைகள் மற்றும் இதர உயிரினங்களை இந்தக் காலப்பகுதியில் காண முடியாது. ஆனால், பூக்கும் தாவரங்கள் சிலவற்றையும் ரொபின் பறவைகளையும் இக்காலப்பகுதியில் காணலாம்.

## பனித்தூவி

பனித்தூவி (Snowflakes) என்பது, மழை பெய்வதுபோல, குளிர்காலங்களில் பஞ்சு போன்ற மென்மையான உறைந்த வெண்பனித் துகள்கள் மேகங்களில் இருந்து வீழ்வதைக் குறிக்கும். இவை மிக நுண்மையான பனிக்கட்டித் துகள்களானதால், பல்வேறு வடிவங்களில் உருவாவதைக் காணலாம்.



## குளிர்காலத்திற்கான முன் ஏற்பாடுகள்


பனிப்பொழிவு நிகழக்கூடிய நாடுகளைச் சேர்ந்த மக்கள், அக்காலத்தை எதிர்கொள்வதற்காக, பல்வேறு முன்னாயத்தங்களைச் செய்துகொள்வர். உணவு வகைகள், விறகுகள் என்பனவற்றை சேமித்தும் சேகரித்தும் வைத்துக்கொள்வர். ஆடைகளையும் தயார்படுத்திக்கொள்வர். அதிக குளிரை ஈடுசெய்யும் வகையில் குளிர்காலத் தொப்பிகள், கோட், சப்பாத்துக்கள் என்பனவற்றையும் தயார்படுத்திக் கொள்வார்கள். வீடுகளில் உள்ள புகைக் கூண்டின்மூலம் நெருப்பு மூட்டியும் மின்சார ஹீற்றர் பயன்படுத்தியும் வீட்டுச் சூழல் கதகதப்பாக வைக்கப்பட்டிருக்கும்.

## ஏற்படும் இடை



குளிர்காலம் ஆரம்பித்தவுடனேயே, மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் பெரும் இடையூறுகள் ஏற்படுகின்றன. கடும் பனிப்பொழிவு காரணமாக மின்சாரம், தொலைபேசி, எரிவாயு விநியோகங்களுக்கு இடையூறுகள் ஏற்படுக
தெருக்கள் பனியால் மூடப்பட்டு போக்குவ
றது. இக்காலத்தில் பாடசாலைகள், உட்பட,
அன்றாட செயற்பாடுகள் பாதிப்படைந்து வி
பாடசாலைகளுக்கு இக்காலப்பகுதி விடுமுறை

## பனித்துளி உருவ



நீரா
குளிர்
பனி
இவ்வ
மிகவு
குளிர்
இடம்
உருவ
தாழ்பகுதி அதிகம் குளிராக இருந்தால், பனி
யில் படியும். பனி மழையாகவும் பனிக்கட்
கவும் அது மாற்றமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனி ...திருக்கும் ...காலத்தில்...

## பனிக்கால கலைப்படைப்புக்கள்



பனிப்பொழிவு நிகழும் காலத்தில் அப்பகுதிவாழ் சிற்பக்கலை வல்லுனர்களும் கலைஞர்களும் தமது கலைப்படைப்புக்களை உருவாக்க முனைவர். இப்பனிக்காலத்தை மையப்படுத்தி காவியம், நாவல், திரைப்படம் ஆகிய கலைப்படைப்புகளும் வெளியிடப்படும். அத்துடன், பனிக்கட்டிகளில் சிற்பங்களை செதுக்குவதனையும் இக்காலத்தில் பெருமளவில் காண முடியும். இது தொடர்பான போட்டி நிகழ்ச்சிகளும் பல நாடுகளில் நடைபெறுகின்றன.

## ... இடையூறுகள்



...றுகள் ஏற்படுகின்றன. அத்துடன், பெருந் ...ட்டு போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகின் ...கள், உட்பட, ஏனைய நிறுவனங்களினதும் ...ிப்படைந்து விடுகின்றன. பெரும்பாலும் ...குதி விடுமுறைக் காலமாக அறிவிக்கப்படும்.


## ... உருவாகும் விதம்



நீராவி 0 பாகை செல்சியஸுக்கு குளிர்மையடைவதன் காரணமாக, பனி உருவாக்கம் நிகழ்கின்றது. இவ்வாறு உருவாகும் பனித்துளிகள் மிகவும் மென்மையானவையாகும். குளிர்மையடைதல் தொடர்ச்சியாக இடம்பெறும்போது, பனிக்கட்டிகள் உருவாகின்றன. வளிமண்டலத்தின் ...ிருந்தால், பனிக்கட்டிகள் கரையாமல் தரை ...வும் பனிக்கட்டி மழையாகவும் பனிப்புயலா

## வருடம் முழுவதும் பனியால் மூடப்படும் துருவப்பகுதிகள்

வடக்கு மற்றும் தென் துருவப் பகுதிகளை அண்மித்ததாக உள்ள நாடுகளுக்கு குளிர்காலத்தில் மட்டுமே பனிப்பொழிவு கிடைக்கும். இது இயற்கையான ஒரு விடயமாகும். ஆனால், பூமியின் வட துருவப்பகுதியிலும் தென்துருவப்பகுதியில் உள்ள ஆர்க்டிக் சமுத்திரம் மற்றும் அண்டார்க்டிகா கண்டம் ஆகிய பகுதிகள் வருடம் முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும். இந்த துருவப் பகுதிகள் வருடத்தில் ஆறு மாதங்கள் வரை இருண்டதாகவே காணப்படும்.



## பனி மலைகள்

பூமியின் வெப்பநிலை வேகமாக அதிகரித்துச் செல்வதன் மோசமான விளைவாக, பனி மலைகள் உருகும்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பனி மலைகள் உருகுவதனால், வெள்ளப் பெருக்கு, கடல் மட்டம் உயர்வடைதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு கடல் மட்டம் உயர்வடைவதனால், ஒருசில தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், பனிமலைகள் கரைவதனால், சூரியக் கதிர்கள் பரவும் சதவீதமும் குறைவடைகின்றது.

## பனியினால் ஏற்படும் விபத்துக்கள்



சிறியளவில் பனிப்பொழிவு உள்ள பகுதிகளில் திடீரெனக் கடுமையான பனிப்படலங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பனிப்புயலும் ஏற்படக் கூடும். பனிப்புயலின்போது, உயிரிழப்புகளும் ஏற்படலாம். மேலும் பனிமலைச் சிகரங்கள் சரிந்து விழும் அபாயமும் உள்ளது. குளிர்காலங்களிலேயே இத்தகைய ஆபத்துக்கள் அதிகம். குளிர்காலத்தில் பழைய பனிப்படலத்தின் மேல் இருக்கும் புதிய பனிப் படலம் மென்மையடைந்து சரிந்து விழுந்துவிடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. வசந்த காலத்தில் சற்று உருகிய பனிச் சரிவுகளுக்கு இடையே பெரிய பனிப்பாறைகள் விழக்கூடும். இதுவும் மிகவும் அபாயகரமான நிலையாகும்.

## பனி விளையாட்டுக்கள்

குளிர்காலத்தில் வயது வேறுபாடின்றி பனி விளையாட்டில் ஈடுபடுவோரைக் காணலாம். பனிச்சறுக்கு விளையாட்டு, ஐஸ் ஹொக்கி, ஸ்னோபோல் சண்டை விளையாட்டு, ஐஸ் சைக்கிளோட்டம், மரங்களைப் பயன்படுத்தி சறுக்கி விளையாடுதல், பனி மனிதனை உருவாக்குதல், ஸ்லேட்டிங் என்பன குளிர்காலத்தில் முக்கியமான விளையாட்டுகளாகும். (இ)



## குளிர்காலத்தில் வன விலங்குகளின் வாழ்க்கை முறை



குளிர்காலம் ஆரம்பமாகியவுடன் விலங்குகளும் பறவைகளும் வெப்பமான பகுதிகளை நோக்கி இடம்பெயர ஆரம்பிக்கின்றன. எவ்வாறாயினும், குளிர் பருவம் உள்ள சூழலில் வாழும் உயிரினங்கள் குளிரைப் பொறுத்துக்கொள்ளும் தகவமைப்பினைப் பெற்றுள்ளன. இதன்போது, இந்த உயிரினங்கள் தமது செயற்பாடுகளை மந்தப்படுத்தி ஓய்வெடுக்கும். தரைக்குக்கீழ் வாழும் அணில்கள் தவளைகள், கரடிகள், பாம்புகள், வௌவால்கள் என்பன குளிருக்கு ஏற்ப வாழும் தகவமைப்பினைக் கொண்டவையாகும்.

இக்காலகட்டங்களில் இவை மிக அரிதாகவே தமக்குரிய உணவுகளைத் தேடிக்கொள்ள வெளியில் வருகின்றன. அத்துடன், குளிர்நிறைந்த இப்பகுதிகளில் வாழும் விலங்குகளின் ரோமங்கள் கடினத்தன்மை வாய்ந்தவையாகவும் காணப்படும். பறவைகளுக்கு சிறகுகள் நீண்டிருக்கும். இவை அனைத்தும் குளிர்காலத்திற்கு ஏற்ற உடல் வடிவமைப்புகளாகும். மேலும், அவற்றின் சருமத்தின்மீது கொழுப்புத் தட்டுக்கள் பெருமளவு படிந்திருக்கும். தரைத் தொகுதிகளிலும் சிற்சில மாற்றங்கள் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் பெட்டகம்

1. ஒவ்வொரு வருடமும் பூமியிலிருந்து, சந்திரனானது 3.82km தூரம் விலகிச் செல்கின்றது.
2. அண்டார்ட்டிகாவில் செப்டெம்பர் 21 ஆம் திகதி மட்டுமே சூரியன் உதயமாகின்றது.
3. ஒரு விண்மீன் வெடித்துச் சிதறும் ஒளி கண்ணுக்குத் தெரிய 170,000 ஆண்டுகள் எடுக்கின்றன.
4. உலகிலேயே முதல் வான்வெளிப்படம் அமெரிக்க உள்நாட்டு சண்டையின்போது பெரசூட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

எம்.ஆர்.எம்.மாலின்,
க/அஸ்ஹர் கல்.,
அக்குறனை.

# அயடின் கலந்த உப்பைப் பாவிப்போம்



மனித உடலில் முக்கிய அவயவங்களின் இயக்கத்துக்கு அயடின் அவசியமாகின்றது. விசேடமாக மூளையின் வளர்ச்சிக்கும் தொழிற்பாட்டுக்கும் அயடின் மிகவும் தேவைப்படுகின்றது. அயடின் குறைபாடுடையவர்கள் மந்த புத்தியுடையவர்களாகவும் சுறுசுறுப்பற்றவர்களாகவும் காணப்படுவார்கள். இதன் குறைபாடு காரணமாக, ஒருவர் விரைவில் உடல் தளர்வடைந்து செயலூக்கமற்ற வராகவும் மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

போதுமான அளவு அயடின் கிடைக்காவிட்டால் கழுத்து வீக்க நோயும் ஏற்படக்கூடும். கழுத்து வீக்க நோய் என்பது தைரோய்ட் சுரப்பிகளில் ஏற்படும் வீக்கமாகும்.

கழுத்து வீக்கம், மந்தபுத்தி, செவிட்டுத்தன்மை, சுறுசுறுப்பின்மை, குருட்டுத்தன்மை, சாதாரண ஒருவரைப் போல் நடமாட முடியாமை போன்றன அயடின் குறைபாட்டின் அறிகுறிகளாகும்.

மப்ரினா மயாஸ்,
பிடவகுரை,
வியாங்கல்லை மு.ம.வித்.

# நாடுகளின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| நைல் நதியின் கொடை | - எகிப்து |
| ஆயிரம் ஏரிகளின் நாடு | - பின்லாந்து |
| உலகில் சர்க்கரைக் கிண்ணம் | - கியூபா |
| சீனாவின் துயரம் | - குவாங்கோ நதி |
| அதிகாலை அமைதி நாடு | - கொரியா |
| ஐரோப்பாவின் நோயாளி | - துருக்கி |
| உலகின் புனித நாடு | - பெலஸ்தீனம் |
| மரகதத் தீவு | - அயர்லாந்து |
| பொற்கோபுர நாடு | - மியன்மார் |

ப.கஸ்தூரி,
வேம்படி மகளிர் உயர்தர பாட., யாழ்ப்பாணம்.




# உங்களுக்குத் தெரியுமா?

* 'பியூஜிமா' எரிமலை எத்தீவில் காணப்படுகின்றது?
ஜப்பானில் தொன்சூ தீவில்

* சீனப் பெருஞ்சுவர் எத்தனையாம் ஆண்டு கட்டப்பட்டது?
கி.பி.220 -206 காலப்பகுதிகளில்

* ஐஃபல் கோபுரம் எந்த நாட்டவரால் கட்டப்பட்டது?
பிரான்ஸ் நாட்டவரால்

* பனாமாக் கால்வாயின் நீளம் யாது?
80km

* 'பிரமிட்' எந்த நாட்டில் அமைந்துள்ளது?
எகிப்தில்

* உலகில் நீண்ட வறட்சி நிலவும் இடம் எது?
அட்டகாமாப் பாலை நிலம்

* சீனப் பெருஞ்சுவரின் அகலம் யாது?
4 மீற்றர்

* தோமஸ் அல்வா எடிசன் எந்த ஊரில் பிறந்தார்?
மிலான் என்ற ஊரில் பிறந்தார்.

எம்.கே.எம்.ஆகில்,
சித்திவிநாயகர் இந்.கல்.,
மன்னார்.

# நுணுக்குக்காட்டி

1590 ஆம் ஆண்டு நெதர்லாந்தில் ஹென்ஸ் ஜேன்சென் மற்றும் அவரது மகனான ஸெக்கரியாஸ் இருவரும் முதல் கூட்டு நுணுக்குக்காட்டியைக் கண்டுபிடித்தனர். இதன் உச்ச உருப்பெருக்கவலு x2000 ஆகும். ஒளி நுணுக்குக்காட்டியினூடாகப் பார்க்க முடியாத வைரஸ் போன்ற நுண்ணங்கிகளைப் பார்ப்பதற்கு இலத்திரனியல் நுணுக்குக்காட்டி பயன்படுகின்றது. இதன் உச்ச உருவப்பெருக்கவலு x500,000 ஆகும்.



நுணுக்குக்காட்டியில் முதலில் தக்கை கலங்களை அவதானித்தவர் ரொபர்ட் ஹூக் ஆவார். இதில் காணப்படும் வில்லைகள் 3 வகைப்படுகிறது.

1. உயர்வலு உயிர் பெருக்க வில்லை.
2. இடைவலு உயிர் பெருக்க வில்லை.
3. தாழ்வலு உயிர் பெருக்க வில்லை.

ஆ.சிவப்பிரியன்,
யாழ்/இந்துக் கல்லூரி,
இணுவில் தெற்கு, சுன்னாகம்.

# ஏழையாக இருந்தால் என்ன?



அறிஞர் ஒருவரிடம் ஏழை ஒருவன் வந்தான்.

"நான் எப்பொழுதும் இறைவனை வழிபட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால், எனக்கு இறைவன் செல்வத்தை அருளவில்லை. வறுமையிலேயே வாடவைத்துக் கொண்டு இருக்கிறார்" என்று குறைபட்டுக்கொண்டிருந்தான். அதற்கு அந்த அறிஞர், "ஆயிரம் வெள்ளிக் காசுகள் தருவதாக இருந்தால் உமது இரண்டு கண்களையும் தருவீரா?" என்று கோட்டார்.

அதற்கு அந்த ஏழை "பத்தாயிரம் வெள்ளிக் காசுகள் தந்தாலும் தர மாட்டேன்" என்றான். சரி "அதுபோல பல மடங்கு தந்தால் உமது இரண்டு கால்களையும் வெட்டித்தருவீரா?" என்று கேட்டார் அறிஞர்.

"மாட்டவே மாட்டேன்" என்றான் ஏழை.

"உமது இரு கண்கள், இரு கால்களே இவ்வளவு மதிப்புடையனவாக இருக்கும்போது, உமது முழு மதிப்பு என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்காக நீ இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஆனால், குறை சொல்கிறாயே. இது தகுமா?" என்று அறிஞர் கேட்டார். தன் செயலுக்கு வருந்திய ஏழை அவரிடம் மன்னிப்புக் கேட்ட பின் அங்கிருந்து சென்று உழைத்து வாழலானான்.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தேசிய பாட.,
ஓட்டமாவடி.

# சூழலைப் பாதுகாப்போம்!

மனிதா!
உன்னைச் சுற்றியுள்ளதோ
சூழல்!
அதனைப் பாதுகாப்பதற்கு
உன்னிடம் வேண்டும் ஆவல்!

நம்மைச் சூழவுள்ளதே வளி!
அவ்வளியை தூய்மை
பேணினால்,
அதுவே நீ வாழ சிறந்த வழி!

நீ வாழ்வதோ தரையில்!
அதனை நீ பேணினால்,
உன் வாழ்வும் தரையில்!

நீர் நீ பேணினால்,
உன் வாழ்வில்
அமையும் சீர்!

மனிதா!
நீ சிந்தித்துப்பார்!
நோயின்றி வாழ வழியை!



எம்.எம்.எஃப். அஸ்னா,
அறபா தே.பாட., மாதத்தறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY




தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.08.22 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 378**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## சரி, பிழை கூறுக (4)

1. 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் நகரம் பிரித்தானியா ஆகும். (----)
2. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. (----)
3. உலகில் அதிகளவு தங்கம் கிடைக்கும் நாடு தென் ஆபிரிக்கா ஆகும். (----)
4. பிலிப்பைன்ஸின் தலைநகராக பீஜிங் உள்ளது. (----)
5. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினம் 'ஈரூடகவாழி' எனப்படும். (----)

## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொல் அமைக்க (5)


1. ர/க்/ம்/ச/க/ - ..........................
2. ட்/ண்/கொ/ம்/டா/ட - ..........................
3. து/ப்/பொ/ர/ந்/ம - ..........................
4. க/கா/ர்/ம/தி/ம்/ - ..........................
5. ணி/வெ/லா/ண் - ..........................

## எழுத்துக்கூட்டத்திற்குள் மறைந்துள்ள சொற்களை இனங்கண்டு நிறந்திட்டுக (1)


eye
pony
yoyo
panda
arrow
parrot

| | | | | | |
|---|---|---|---|---|---|
| v | a | r | r | o | w |
| y | o | y | o | y | l |
| n | k | d | e | y | e |
| o | n | p | t | a | t |
| p | a | r | r | o | t |
| p | a | n | d | a | s |

## இடைவெளிகளை நிரப்புக (2)




## சரியான எண்ணிக்கையுடன் இணைக்க (3)




## அறிவுக்கு விருந்து - 375 விடைகள்

போட்டி: 01




போட்டி: 03




போட்டி: 04

1. திறந்தவெளி
2. கோள்மண்டலம்
3. பரிமாணம்
4. காவலாளி
5. இன்னல்

போட்டி: 05


1. இத்தாலி - ரோம்
2. சிங்கப்பூர் - சிங்கப்பூர்
3. மியன்மார் - ரங்கூன்
4. பிரான்ஸ் - பெரிஸ்
5. எகிப்து - கெய்ரோ

# புறாக்களின் விந்தைகள்

முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த புறாக்களில் 289 இனங்கள் இருக்கின்றன. இவை அனைத்தும் 'கொலம்பிடே' என்ற பறவை இனத்தைச் சேர்ந்தவை. இவற்றில் மலைப்புறா அதிக முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இது வீடுகளிலும் வளர்க்கப்படும். இப்புறா, செங்குத்தான பாறைகளில்கூட கால்களை ஊன்றிப் பற்றிக்கொண்டு நிற்கும். இதை 'சுவரொட்டிப் புறா' என்றும் கூறுவார்கள்.



'ஹோமிங் பிஜன்' என்ற புறா இனம்தான் வேகமாகப் பறக்கக்கூடியது. முற்காலத்தில் செய்தி அனுப்புவதற்கு இந்தப் புறாவைத்தான் பயன்படுத்தினர். அதற்கமைவாக, கடிதங்களை மெல்லிய ஓலை அல்லது காகிதத்தில் எழுதிச் சுருட்டி இதன் கால்களில் கட்டி அனுப்பினர். நியூகினியாவைச் சேர்ந்த 'க்ரோண்ட்' புறாக்கள் அளவில் பெரியவை. மிகச் சிறியவை 'ஜெனஸ் கொலம்பினா' என்ற இனத்தைச் சேர்ந்த புறாக்கள் ஆகும்.





புறாக்கள் உலகெங்கிலும் இருந்தாலும் இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா போன்ற தென்கிழக்கு ஆசியப்பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்படுகின்றன. பறவைகளிலேயே புறா மட்டுமே நீரைத் தன் அலகால் உறிஞ்சிக் குடிக்கும் பழக்கமுடையது. புறாக்களில் ஆண் புறாக்கள் கூடு கட்டுவதற்கு உரிய குச்சிகளைக் கொண்டுவந்து சேர்க்கின்றன. பெண் புறா கூடு கட்டும். பெண் புறா ஏப்ரல் மாதத்தில் முட்டைகளை இடும். ஆனால், ஆண் புறாதான் அவற்றை அடைகாக்கும். புறாக்கள் தாங்கள் தின்று, பாதி செரித்த இரையை மீண்டும் வாய்க்குக் கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன. இந்த இரைக்கு 'பிஜன் மில்க்' என்று பெயர். புறாக்களுக்குத் திசைகள் பற்றிய உணர்வுகள் அதிகமாகவே இருக்கும். இரை தேடி எவ்வளவு தூரம் பறந்து சென்றாலும் சரியாகத் தன் கூட்டுக்குத் திரும்பி வந்துவிடும்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 375 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.வை.ஸல்ஹா, துனுவில வீதி, அக்குறனை.

**போட்டி: 02**
எம்.ஹனுஷியா, ரஜ வீதி, மாத்தளை.

**போட்டி: 03**
எவறில்டா ஜெரோசி, பண்டாரிக்குளம், வவுனியா.

**போட்டி: 04**
இந்துஷான் குமார், அப்பர் சொய்சி, பூண்டுலோயா.

**போட்டி: 05**
சனோ நஷாத், ஃப்ரெஞ்ச் சிடி, மருதமுனை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- என்.சர்மிளா, திகன.
- நஜீப் அஹமட், சிலாபம்.
- எஃப். முனவ்வரா, ஹிங்குல.
- பி. அம்ரித், கொழும்பு -13.
- எம்.வத்சலா, எட்டியாந்தோட்டை.
- எஸ்.ருகையா, துந்துவை.
- சபா அமானி, வெயன்கொட
- எஸ்.நிதர்சன், நிலாவெளி.
- க. அருந்ததி, ஹப்புத்தளை.
- எம்.ருக்ஷான், பாணகமுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



தி.ராகவி,
கிரேட்வெஸ்டன் த.வித்.,
தலவாக்கலை.



எம்.நுஸ்ரி,
தில்லையடி மு.ம.வித்., தில்லையடி.



எம்.அப்ரிடி,
ஹமீதியா மு.ம.வித்.,
கும்பலங்க.



எம்.ரிப்கா,
பாத்திமா பாலிகா மு.வித்., கண்டி.



சி.ஹஸீம்,
அல்-ஹிலால் மத்.கல.,
தம்பாளை.




பி.நிதுசன்,
கதிரேசன் மத்.கல்., நாவலப்பிட்டி.



ஷப்னா ஹுசைன்,
வெலம்பொடை மு.ம.வித்.,
வெலம்பொடை.




ஜே.டில்ஷானி,
கரிடாஸ் பாலர் பாட., நுவரெலியா.



ஸைனப் வகீல்,
அரபா தே.பாட., கோட்டகொட.



வெ.கணிஸ்டன்,
செங்கலடி மத்.கல்., செங்கலடி.




ம.சருண்யா,
எபஸ்போட் த.வித்., நானுஓயா.



எஃப்.நப்லா,
அல்-ஹிக்மா ம.வித்., கம்பளை.



எஃப்.மர்ஜியா,
எதுன்கஹகொடுவ மு.ம.கல்.,
எதுன்கஹகொடுவ.



கு.டசிகரன்,
உசன் இராமநாதன் ம.வித்., கரம்பகம்.



சு.குகதாஷ்,
செங்கலடி மத்.கல்., செங்கலடி.



ம.கோபிதன்,
சித்திவிநாயகர் இ.கல்., உப்புக்குளம்.



எஃப்.ருக்ஷா,
ஆமினா பெண்கள்
தே.பாட., மாத்தளை.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.



மாங்குளம்-பனிக்கன்குளத்தைச் சேர்ந்த மோசஸ்-விஜயராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் திலக்ஷன், 08.08.2012 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் யேசு கிறிஸ்துவின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.


(தகவல் : மோ.நிரோஜன்)

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு


# இலங்கையில் சுவரோவியங்கள்

ஓவியம் வரைவோம் - 115
ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

இலங்கையில் பௌத்த சமய பரம்பலுடன் ஓவியக்கலையும் வளர ஆரம்பித்தது. இலங்கையில் இன்று காணப்படும் ஓவியங்களை அவை வரையப்பட்ட கால அடிப்படையில் பௌத்த சமயம் சார்ந்த, பௌத்த சமயம் சாராத ஓவியங்கள் என வகைப் படுத்த முடியும். பௌத்த சமய வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்களால் கற்குகைகளின் சுவர்களில் ஓவியங்கள் வரைப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும். இந்த ஓவியங்கள் மூலம் அக்கால மிருகங்கள் பற்றிய தகவல்கள்,மந்திர மாயங்கள், வணக்க வழிபாடுகள், அலங்காரம், வேட்டையாடுதல், ஓய்வுநேரம் போன்றவற்றை உணர்ந்துகொள்ளலாம்.



ஆதிவாசிகள் இந்த ஓவியங்களை வரைய சாம்பல் (சாந்து), கரி, களிமண், காரீயம், சுண்ணாம்பு போன்றவற்றை வர்ணங்களாகப் பயன்படுத்தியுள்ளனர். ஓவியங்களை வரைய விரல்களையே அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர். சாம்பல் போன்றவற்றிற்கு பச்சை இலைச் சாயங்களைக் கலந்து பயன்படுத்தியுள்ளனர். ஆண்கள் வேட்டைக்குச் சென்ற வேளைகளில் பெண்கள் ஓவியங்களை வரைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிவப்பு நிறத்தை மிருக குருதியிலிருந்து பெற்றுள்ளனர். இவர்களின் ஓவியங்களில் மிருகங்களும் மனித உருவங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த ஓவியங்களில் யானை, மாடு, மான், புலி, எருமை,சிங்கம், குரங்கு, முதலை, கீரி போன்றவை உட்பட, அடையாளம் காண முடியாத மிருகங்களும் காணப்படுகின்றன.




இலங்கையின் இத்தகைய புராதன தொல்பொருள் ஆய்வுகளை தொல்பொருள் ஆய்வாளர் H.C.P.பெல் என்பவரே மேற்கொண்டார். அவர் கி.பி.1897 இல் இந்த ஆய்வுகளில் ஈடுபட்டார். இதன்போது, தொரவக குகையில் காணப்பட்ட ஓவியங்களை அடையாளம் கண்டார். இந்த ஓவியங்களில் யானை, குட்டி யானை மற்றும் ஈட்டி என்பன வரையப்பட்டுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனத்திற்கான காரணம்



உலகில் இருக்கக்கூடிய அனைத்துப் பழ வகைகளும் ஒருமுறை ஒன்று சேர்ந்து ஒரு மாநாட்டைக் கூட்டின. தலைமையேற்றுப் பேசிய பழம், உலகில் உள்ள பழங்களில் எந்தப் பழம் அதிக சுவையுடையது; சிறப்புடையது? என்ற கேள்வியுடன் தனது தலைமை உரையை முடித்துக் கொண்டது. இதைக்கேட்ட பழங்கள் ஒன்றுக்கொன்று அடித்தொண்டையில் கிசுகிசுவெனப் பேசிக்கொண்டன.

அப்பிள் பழம், மாம்பழம், அன்னாசி, கொய்யப்பழம், மாதுளம்பழம் என அனைத்தும் தாமே அதிக சுவை உடையன என்று கூறி மார்தட்டின. ஆனால், திராட்சைப் பழம் மட்டும் எதுவும் பேசாமல் அமைதியுடன் இருந்தது. அனைத்துப் பழங்களும் திராட்சைப் பழத்தை வியப்புடன் பார்த்த வண்ணம் இருந்தன. திராட்சைப் பழம் எதையாவது பேசும் என்று எதிர்பார்த்தன. ஆனால், அதுவோ மௌனமாக இருந்தது.

இதனால், ஏனைய பழங்கள் திராட்சைப்பழத்தைப் பார்த்து இழிவாகச் சிரித்தன.

அப்போது பலாப்பழம் ஒன்று உருண்டு வந்தது. அது திராட்சைப்பழத்தைப் பார்த்து அன்புடன் கேட்டது,

"திராட்சையே! நீ ஏன் மௌனமாக நிற்கிறாய்? எனக்குத் தெரியும். உலகில் உள்ள பழங்களிலேயே சிறப்புப் பெற்றவன், நன்மையைச் செய்பவன், நலம் அளிப்பவன், சுவை நிரம்பியவன் நீதான் என்று! ஆனால், அதையும் தாண்டிய ஒரு சிறப்புத் தகுதி உன்னிடம் உண்டு. அதை நீயே உன் வாயால் சொல்ல வேண்டும். அப்போதுதான் ஏனைய பழங்களுக்கு உன் தகுதி பற்றி அறிந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறியது.

திராட்சைப்பழம் அமைதியாகக் கூறியது, "அண்ணா நீங்கள் அனைவரும் தனித்தனியாகவே வளர்கிறீர்கள். தனித்தனியாகவே விற்பனை செய்யப்படுகிறீர்கள். ஆனால், நாங்களோ ஒரு கூட்டமாக, கொத்தாக வளர்கின்றோம். எம்மில் ஒருவர் வளர்வதற்கு ஏனையவர்களுக்கும் இடம் தருகிறோம். விட்டுக்கொடுத்து வாழ்கிறோம். விற்பனைக்குப் போகும்போதும் கொத்தாகவே செல்கின்றோம். தனியாக நாங்கள் விலை போவதில்லை.

"எங்களைச் சாறாக்கிக் குடிக்கும்போது, கொத்துக் கொத்தாகவே அழிந்து போகிறோம். வாழ்விலும் வளர்ச்சியிலும் மரணத்திலும் நாங்கள் இணைபிரியாமல் இருக்கிறோம். அதனால்தான், நாங்கள் சிறந்தவர்கள் என்ற அங்கீகாரத்தை மனிதர்களிடமிருந்து அடைந்திருக்கிறோம். இதுவே எமக்குப் போதும்" என்றது. ஏனைய பழங்கள் அனைத்தும் வெட்கத்தால் தலைகுனிந்தன.

# பணத்தாசையின் விளைவு



வள்ளுவன், வளவன் இருவரும் நெருங்கிய நண்பர்கள். பட்டதாரிகளான இருவரும் நகரத்திற்கு வேலை தேடிச் சென்றனர். வாடகை குறைந்த இடத்தில் அறை எடுத்துத் தங்கினர். ஆளுக்கு ஒரு பக்கமாக வேலை தேடிச் சென்றனர். ஒரு வாரமாகியும் இருவருக்கும் வேலை கிடைக்கவில்லை. இருந்தாலும் தேனீயைப் போல முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து வேலை தேடியவண்ணம் இருந்தனர்.

ஒருநாள் அவர்கள் தங்கியிருந்த அறைக்கு அருகே இருந்த மரத்தடியில் யாரோ ஒருவன் பள்ளம் ஒன்றைத் தோண்டி எதையோ புதைத்துவிட்டுப் போவதை வளவன் பார்த்தான்.

அவன் சென்றதும் வளவன் மரத்தடிக்குச் சென்று மெதுவாக அந்தப் பள்ளத்தைத் தோண்டிப் பார்த்தான். அங்கு ஒரு ப்ளாஸ்டிக் பையில் ஆயிரம் ரூபாய் பணக்கட்டுகள் இருப்பதைப் பார்த்தான். வறுமையும் ஆசையும் அதை எடுத்துக் கொள்ளத் தூண்டியது. பணக்கட்டை எடுத்துக்கொண்டு வளவன் தன் அறைக்கு வந்தான்.

'வள்ளுவனுக்குப் பணம் கிடைத்ததைப் பற்றிச் சொல்லக்கூடாது. தெரிந்தால், அவனுக்கும் பங்கு கொடுக்கவேண்டும்' என்று எண்ணியவன் பணத்தைப் பெட்டியின் அடியில் மறைத்து வைத்தான். வள்ளுவனோ தூங்கிக் கொண்டிருந்தான்.

பணக்கட்டில் இருந்து ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து வளவன் வயிறாறச் சாப்பிட்டுவிட்டு வருவோம் என ஹோட்டலுக்குப் போனான்.

நன்றாகச் சாப்பிட்டுவிட்டு பணத்தை ஹோட்டல் முதலாளியிடம் கொடுத்தான். அது கள்ளநோட்டு என்று முதலாளி கண்டுபிடித்து பொலிஸாருக்குத் தகவல் கூறினார். பொலிஸார் வளவனைக் கூட்டிச் சென்றுவிட்டனர். வள்ளுவன் இதையறிந்து காவல்நிலையம் சென்று, வளவனிடம் நடந்ததைக் கேட்டறிந்தான். பின்னர் காவல்நிலைய அதிகாரியிடம் சென்ற வள்ளுவன், "நாங்கள் வேலை தேடித் தான் வந்தோம். கள்ள நோட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவன் மரத்தடி ஒன்றில் புதைத்த பணத்தைத் தான் இவன் எடுத்திருக்கிறான். இதுவும் தவறு தான். வறுமையும் வேலை கிடைக்காத சூழ்நிலையும் அவனை இப்படிச் செய்ய வைத்துவிட்டது. இவனை நம்பித் தான் இவனது குடும்பமே உள்ளது. தயவுசெய்து இவனை மன்னித்து விட்டுவிடுங்கள்" என்று மன்றாடினான்.

> *'வள்ளுவனுக்குப் பணம் கிடைத்ததைப் பற்றிச் சொல்லக்கூடாது. தெரிந்தால், அவனுக்கும் பங்கு கொடுக்கவேண்டும்' என்று எண்ணியவன் பணத்தைப் பெட்டியின் அடியில் மறைத்து வைத்தான்.*

கள்ளநோட்டை புதைத்தவனைப் பற்றி வளவனிடம் பொலிஸார் அடையாளம் கேட்டனர். அவனைப் பிடித்துக்கொண்டு வந்து வளவனிடம் காட்ட, அவன் தான் பணத்தைப் புதைத்தவன் என்று உறுதிப்படுத்தினான். பின்னர், வளவனை எச்சரித்து அனுப்பிவிட்டனர்.

வள்ளுவனும் வளவனும் தமது அறைக்குத் திரும்பினர். "நாளிதழ்களில் இதுபற்றி வெளிவந்திருந்தால், உன் நிலைமை என்னவாகி இருக்கும்? உன் குடும்பம் என்னாவது?" என்று எச்சரித்தான் வள்ளுவன்.

"வள்ளுவா, என் பேராசைதான் என் வாழ்க்கையை நாசமாக்க இருந்தது. பணம் வந்ததும் உடன் இருந்த உன்னையே ஒதுக்கத் துணிந்தேன். என்னை மன்னித்துவிடு" என்று மனம் கலங்கினான். "பணத்தைவிட செல்வாக்கானது, உண்மையான நட்பே" என்று வளவனை ஆறுதல்படுத்தினான் வள்ளுவன்.

# காணாமல் போன பணப்பை



ஒரு சமயம் பெருமத்தூர் என்ற ஊரில், வியாபாரி ஒருவனின் பணப்பை காணாமல் போய்விட்டது. அந்தப் பணப்பையில் இரண்டாயிரம் ரூபாய் இருந்ததாகவும் அதைக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் சன்மானம் அளிப்பதாகவும் விளம்பரப்படுத்தினான் அந்த வியாபாரி.

அந்தப் பணப்பை ஒரு தொழிலாளியின் கைக்குக் கிடைத்தது. அவன் நேர்மையாளன். விளம்பரப்படி அந்த வியாபாரியிடம் சென்று, பணப்பையைக் கொடுத்தான். அவனும் பணப்பையை வாங்கி எண்ணிப் பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தது. ஆனால், தான் விளம்பரப்படுத்தியபடி, பணத்தைக் கொடுக்க அவனுக்கு மனம் வரவில்லை. அதனால், அவன் அந்தத் தொழிலாளியிடம், "இதில் ரத்தினம் ஒன்றும் இருந்தது. அது எங்கே?" என்று கேட்டான். தொழிலாளிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"உங்கள் விளம்பரப்படி இரண்டாயிரம் ரூபாய் சரியாக இருக்கிறது. நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுப்பது தான் நியாயம்" என்று கூறினான்.

ஆனால், வியாபாரி கொடுக்க மறுக்கவே, தொழிலாளி தனது வழக்கை நீதிமன்றத்தில் பதிவு செய்தான். நீதிபதி இரு தரப்பினரையும் விசாரித்தார். வியாபாரியின் எண்ணம் நீதிபதிக்குப் புரிந்துவிட்டது.

"உமது காணாமல் போன பையில் இரண்டாயிரம் ரூபாயும் ஒரு ரத்தினமும் இருப்பதாகச் சொல்கிறீர். அதனால், இது உமது பையாக இருக்கமுடியாது. வேறு ஒருவருடையதாகத்தான் இருக்க வேண்டும். அதை எடுத்தவரிடமே நீங்கள் கொடுத்து விடுங்கள். நீங்கள் மீண்டும் பணமும் ரத்தினமும் உள்ள பையைக் காணவில்லை என்று விளம்பரம் கொடுங்கள் [illegible]மாவது கிடைத்தால் கொண்டு வந்து கொடுப்பார்கள்" என்று கூறினார். வியாபாரி திடுக்கிட்டான். தனது யோசனை தனக்கே அபத்தமாகிவிட்டதே என்று அஞ்சி, உண்மையை ஒப்புக்கொண்டு, தொழிலாளிக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மா, அப்பா, மகன் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

පුතා: **අම්මේ! අද අපට විභාගයේ ලකුණු දුන්නා. මම පන්තියේ පළවෙනියා.**
அம்மே! அத அபட்ட விபாகயே லகுணு துன்னா. மம பந்தியே பளவெனியா.
மகன்: **அம்மா! இன்று எங்களுக்குப் பரீட்சையில் புள்ளிகள் கிடைத்தன. நான் வகுப்பில் முதலாம்பிள்ளை.**

අම්මා: **හොඳ පුතා. දැන් තාත්තා පුතාට බයිසිකලයක් අරන් දෙයි. පුතාට ගණන්වලට ලකුණු කීයද?**
ஹொந்த புதா. தென் தாத்தா புதாட்ட பய்சிகலயக் அறன் தெய். புதாட்ட கணன்வலட்ட லகுணு கீயத?
அம்மா: **நல்ல மகன். இப்போது அப்பா மகனுக்கு சைக்கிள் ஒன்று வாங்கித் தருவார். மகனுக்கு கணிதத்திற்கு எத்தனை புள்ளிகள்?**

පුතා: **ගණිතයට අසූ අටයි.**
கணிதயட்ட அசூ அட்டய்.
மகன்: **கணிதத்திற்கு எண்பத்தி எட்டு.**

අම්මා: **හොඳ පුතා, තාත්තාට සතුටු හිතෙයි.**
ஹொந்த புதா, தாத்தாட்ட சதுட்டு ஹிதெய்.
அம்மா: **நல்ல மகன், அப்பா சந்தோஷப்படுவார்.**

පුතා: **ඔව් අම්මේ. මම තාත්තා එනකම් තමා බලාගෙන ඉන්නේ.**
ஒவ் அம்மே. மம தாத்தா எனகம் தமா பளாகென இன்னே.
மகன்: **ஆம் அம்மா. நான் அப்பா வரும் வரைதான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.**

**(அப்பா வீட்டிற்கு வந்த பின்னர்)**

පුතා: **තාත්තේ! අද අපේ විභාගයේ ලකුණු දුන්නා.**
தாத்தே! அத அபே விபாகயே லகுணு துன்னா.
மகன்: **அப்பா! இன்று எங்கள் பரீட்சையில் புள்ளிகள் கிடைத்தன.**

තාත්තා: **ආ එහෙමද.. කොහොමද ලකුණු?**
ஆ எஹெமத... கொஹொமத லகுணு?
அப்பா: **ஆ அப்படியா... புள்ளிகள் எப்படி?**

පුතා: **ගණිතයට අසූ අටයි. ඉංග්‍රීසි අසූ පහයි. සිංහල අසූවයි. දෙමළ භාෂාව අනූවයි. තාත්තේ මම පන්තියේ පළවෙනියා.**
கணிதயட்ட அசூ அடய். இங்க்ரீசி அசூ பஹய். சிங்கள அசூவய். தெமள பாஷாவட்ட அனூவய். தாத்தே, மம பந்தியே பளவெனியா.
மகன்: **கணிதத்தில் எண்பத்தி எட்டு. ஆங்கிலத்தில் எண்பத்தி ஐந்து. சிங்களத்தில் எண்பது. தமிழ் மொழியில் தொன்னூறு. அப்பா, நான் வகுப்பில் முதலாம்பிள்ளை.**

තාත්තා: **හොඳ පුතා.**
ஹொந்த புதா.
அப்பா: **நல்ல மகன்.**

පුතා: **තාත්තේ! මගේ බයිසිකලය?**
தாத்தே! மகே பய்சிகலய?
மகன்: **அப்பா! என்னுடைய சைக்கிள்?**

තාත්තා: **පුතාගේ උපන්දිනය දහසය වෙනිදා නේද? මම එදාට අරන් දෙන්නම්.**
புதாகே உபன்தினய தஹசய வெனிதா நேத? மம எதாட்ட அரன் தென்னம்.
அப்பா: **மகனுடைய பிறந்ததினம் பதினாறாம் திகதிதானே? நான் அன்றைய தினம் வாங்கித் தருகிறேன்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. நான் வகுப்பில் முதலாம்பிள்ளை.
........................................................................

ii. எனக்கு கணிதத்திற்கு எண்பத்தி எட்டுப் புள்ளிகள்.
........................................................................

iii. அப்பா வரும்வரைதான் பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.
........................................................................






வினாநிலை வாக்கியங்களை (Interrogative Sentences) தன் கூற்று நிலையில் இருந்து, பிறர் கூற்று நிலைக்கு மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே அவதானிப்போம்.

(அ) ஆசிரியர் ரொஹானிடம் கேட்டார், ''நீ என்ன செய்துள்ளாய்?'' என்று.
The teacher asked Rohan, "What have you done?"
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஆ) நீ என்ன செய்துள்ளாய் என ஆசிரியர் ரொஹானிடம் கேட்டார்.
The teacher asked Rohan what he had done.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

(இ) ஆசிரியர் ரொஹானிடம் கேட்டார், ''நீ நேற்று என்ன செய்தாய்?'' என்று.
The teacher asked Rohan, "What did you do yesterday?"
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஈ) நீ நேற்று என்ன செய்தாய் என ஆசிரியர் ரொஹானிடம் கேட்டார்.
The teacher asked Rohan what he had done the previous day.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

(உ) தந்தை நிமலிடம் கேட்டார், ''நீ ஏன் தாமதமாக வந்தாய்?'' என்று.
Father asked Nimal, "Why did you come late?"
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஊ) நீ ஏன் தாமதமாக வந்தாய் என தந்தை நிமலிடம் கேட்டார்.
Father asked Nimal why he had come late.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

(எ) அதிபர் என்னிடம் கேட்டார், ''உனது தந்தை வீட்டில் இருக்கின்றாரா?'' என்று.
The principal asked me, "Is your father at home?"
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஏ) எனது தந்தை வீட்டில் இருக்கின்றாரா என அதிபர் என்னைக் கேட்டார்.
The principal asked me whether my father was at home.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

(ஐ) ரகுஜன் என்னிடம் கேட்டான், ''உனது தந்தை உறங்கிக்கொண்டுதான் இருக்கின்றாரா?'' என்று.
Ragujan asked me, "Is your father sleeping?"
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஒ) எனது தந்தை உறங்கிக்கொண்டுதான் இருக்கின்றாரா என ரகுஜன் என்னிடம் கேட்டான்.
Ragujan asked me whether my father was sleeping.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

(ஓ) முகாமையாளர் என்னிடம் கேட்டார், ''உன்னால் இந்த வேலையைச்செய்ய முடியுமா?'' என்று.
The manager asked me,"Can you do this work?"
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)


(ஔ) உன்னால் இந்த வேலையைச் செய்ய முடியுமா என முகாமையாளர் என்னைக் கேட்டார்.
The manager asked me whether I could do that work.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு தூதுவர் கொஃபி அனான் பதவி விலகினார்

சிரியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் பதற்றத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கில் இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கியநாடுகள் சபையினதும் அரபு லீக்கினதும் சிறப்புச் சமாதான தூதுவராகப் பணியாற்றி வந்த ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் கொஃபி அனான் தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.



தமது சமாதானத் திட்டத்திற்குப் போதிய ஆதரவு கிடைக்காமையின் காரணமாகவே, பதவியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். தன்னால் முன்வைக்கப்பட்ட ஆறு அம்சத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இரண்டு தரப்பாரும் இதய சுத்தியுடன் நடந்துகொள்ளவில்லை என்றும் இதனால், மோதல்கள் அதிகரித்துள்ளன என்றும் கொஃபி அனான் மேலும் தெரிவித்துள்ளார்

எனினும், சிறியாவிற்கு எதிராக, ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை ரஷ்யாவும் சீனாவும் தோற்கடித்ததன் காரணமாகவே, கொஃபி அனானின் முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் போனதாக அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாம் உலக யுத்தக் கப்பல் ஆழ்கடலில் கண்டுபிடிப்பு

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஜேர்மனியின் 'யு 550' என்ற நீர்மூழ்கிக் கப்பலொன்று ஆழ்கடல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




ஜோமஸ்ரனி என்பவரின் தலைமையிலான ஏழுபேரைக் கொண்ட குழுவொன்று



'நான்ட்கெட்' எனும் கடல் பகுதியில் வைத்து மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் போதே, மேற்படி கப்பலைக் கண்டுபிடித்துள்ளது. 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியன்றே, மேற்படி கப்பல் யுத்தத்தின்போது மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க போர்க்கப்பலைச் சேர்ந்த படையினர் இந்த கப்பலைப் பார்வையிட உள்ளதாகவும் இதனைக் கண்டுபிடித்த குழுவின் தலைவர் ஜோமஸ்ரனி தெரிவித்துள்ளார்.






அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# ஹிலரி கிளின்டன் செனகல் விஜயம்

**ஆபிரிக்காவில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலரி கிளின்டன் செனகலின் தலைநகரமான டாகர் நகரத்திற்கும் சென்றிருந்தார். அண்மையில் செனகலில் இடம்பெற்ற தேர்தலையடுத்து, அங்கு**



**ஜனநாயக செயற்பாடுகள் முன்னேற்றம் கண்டு வருவதாக ஹிலரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.**

**இந்த விஜயத்தின்போது, செனகல் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக, அந்நாட்டின் ஜனாதிபதி மெக்கி சலுவுடன் ஹிலரி கிளின்டன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். 2000 ஆம் ஆண்டிலிருந்து பதவியிலிருந்த ஜனாதிபதி அப்டுலாயே வாடியின் ஆட்சி ஆர்ப்பாட்டங்களின்மூலம் கவிழ்க்கப்பட்டதையடுத்து நடைபெற்ற தேர்தலின்மூலம் தற்போதைய ஜனாதிபதி சலு ஆட்சியைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.**

## தெரிந்து கொள்வோம்

- ஒரு கிலோ பட்டுநூலைப் பெற எத்தனை பட்டுப்பூச்சிகளை அழிக்க வேண்டும்?
  சுமார் 15,000 பட்டுப்பூச்சிகள்



- உலகிலுள்ள புத்தர் சிலைகளில் முழுவதும் தங்கத்தினால் செய்யப்பட்ட மிகப்பெரிய புத்தர் சிலை எங்கே அமைந்துள்ளது? அதன் நிறை, உயரம் என்ன?
  தாய்லாந்து நாட்டின் பெங்கொக் நகரில் உள்ளது. அதன் உயரம் 3 மீற்றர், நிறை 5,500 கிலோ



- A.K. ரக துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர் யார்? எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
  சார்ஜன்ட் கலோஸ்னிகோ- 1947 இல்



- நீர், நிலம், பனி, சகதி அனைத்திலும் பயணிக்கக்கூடிய வாகனம் எது?
  ஹோவர் கிரஃப்ட்



- இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் ஹிரோசிமா மற்றும் நாகசாகி மீது ஐக்கிய அமெரிக்கா போட்ட அணுகுண்டுகளுக்கு என்ன பெயர் சூட்டப்பட்டிருந்தது?
  Little boy, Fat man



- உலகில் அதிக நாடுகளை ஊடறுத்துச் செல்லும் நதி எது?
  டன்யூப் நதி (ஐரோப்பாவில் உள்ளது)



- ஐக்கிய நாடுகள் சபையில் 192 ஆவது நாடாக, மொன்டினிக்ரோ நாடு அங்கத்துவத்தைப் பெற்றது. 193 ஆவது நாடாக அங்கத்துவம் பெற்ற நாடு எது?
  தென் சூடான்



- ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இதுவரை யூரோ நாணயத்தை ஏற்றுக்கொள்ளாத நாடுகள் எவை?
  பிரித்தானியா, டென்மார்க், சுவிடன், கிரேக்கம்



- இலங்கையில் 31 ஆவது பிரதம நீதி அரசராக இருந்த சரத் என் சில்வா ஒய்வுபெற்ற பின்னர் 32 ஆவது நீதிபதியாக நியமனம் பெற்றவர் யார்?
  அசோகா டி சில்வா

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## அற்லஸ் கேள்வி - 373

**கேள்வி:** இரண்டாம் உலக யுத்தத்தின்போது, கடலில் மூழ்கி கண்டுபிடிக்கப்பட்ட கப்பலின் பெயர் என்ன?

சரியான விடை..................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 373, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 371 இன் சரியான விடை: பிரதீபா பட்டீல்**

**பரிசு பெறுவோர்**

நுஹா ஹஸீன், துணுவில வீதி, கண்டி.

சோ.வினோஜ் குமார், கோரக்கர் வீதி, சம்மாந்துறை.

எம்.மஃபாஸ், ஓட்டமாவடி, வாழைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் தகவல்கள்...






*இப்போழுது ஒலிம்பிக் காலமல்லவா? இக் காலகட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் நிகழ்ந்த சில முக்கிய விடயங்களை இங்கே நினைவுகூருவோம்.*

## 'ஜீயஸ்' என்ற கடவுள்

'ஒலிம்பிக்' ஆரம்பித்து சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அக்காலகட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும் மாரிகாலம் வரும்போது, இனித் தொடர்ந்து மழையும் குளிருமாகத் தான் இருக்கப்போகிறது என அக்கால கிரேக்க மக்கள் அஞ்சி நடுங்கினர். பேராபத்து ஒன்று வரப்போகின்றது எனக் கருதி அதில் இருந்து தங்களைக் காக்க 'ஜீயஸ்' என்ற கடவுளின் அருள் பெற்றவனைத் தவிப்போடு தேடினர். ஒரு வெற்றியாளனே ஜீயஸின் அருள் பெற்றவனாக இருப்பான் என உறுதியாக நம்பினர். எனவே, அந்த வெற்றியாளனைக் கண்டுபிடிக்க ஓட்டப்பந்தயங்களை நடத்தினர். பந்தயத்தில் வெற்றி பெற்றவனை தலைமேல் தூக்கி ஆனந்தக் கூத்தாடினர். கவிஞர்களை அழைத்து வெற்றியாளனைப் புகழ்ந்து பாடச் சொன்னார்கள். சிலைகள் கூட எழுப்பினார்கள்.




## ஆண்கள் மட்டும்

கிரேக்க நாட்டின் ஒலிம்பியா நகரில் நடந்து வந்த இந்த விளையாட்டிற்கு கி.மு. 776 ஆம் ஆண்டு சில புதிய சட்டதிட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அதில் ஒன்று கிரேக்கர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம், வேற்று நாட்டவர் எவரும் கலந்து கொள்ளக்கூடாது என்பதாகும்.

அடுத்து ஆண்கள் மட்டுமே கலந்து கொள்ளமுடியும். போட்டிகளில் பெண்கள் கலந்துகொள்ள முடியாது. இவை தவிர போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மட்டுமல்ல. பயிற்சியாளர்களும் போட்டிக்கு ஆடை இன்றியே வரவேண்டும். போன்ற சட்டதிட்டங்களும் அப்போது பிறந்தன.

## முதல் மரியாதை

ஒரு நாடும் மற்றொரு நாடும் போரில் கடுமையாக ஈடுபட்டு வந்தாலும்கூட, ஒலிம்பிக் போட்டிகள் வந்ததும் யுத்தத்தை நிறுத்திவிட்டு ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டதாகவும், பின் ஒலிம்பிக் முடிந்த பின்னர் மீண்டும் போரைத் தொடங்கியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.



## அந்தஸ்தும் தடையும்

கிரேக்க நாடு உரோம சாம்ராஜ்சியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வந்ததும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு சர்வதேச அந்தஸ்துக் கிடைத்தது. கிரேக்க நாடு மட்டும் பங்குபற்றமுடியும் என்ற நிலை மாறி பல நாடுகள் ஒலிம்பிக்கில் பங்குபற்றும் முறை வந்தது. ஆனால், ஒலிம்பிக் தொடர்ந்து நீடிக்கவில்லை. கூடவே போட்டிகளுக்குத் தடையும் வந்தது. ஆடைகளின்றி விளையாடும் இதெல்லாம் ஒரு விளையாட்டா? அவமானம். எனக் கருதிய கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த உரோமப் பேரரசின் மன்னர் ஒலிம்பிக் போட்டிகளை ஒரேயடியாக கி.பி. 393 இல் தடைசெய்தார்.

*(மிகுதி அடுத்தவாரம்...)*

-லீபாகர்





# உலகின் வேகமான மனிதனின் விவேகம்

## உசைன் போல்ட்

உலகின் வேகமான மனிதன் மட்டுமன்றி விவேகமான மனிதனும் தானே என்பதை ஜெமெய்க்காவின் உசைன் போல்ட் மீண்டும் நிரூபித்துள்ளார். லண்டன் ஒலிம்பிக் 100 மீற்றர் இறுதிப் போட்டியில் 9.63 வினாடிகளில் ஓடியே போல்ட் இந்த சாதனையை நிரூபித்துள்ளார். அதுமட்டுமன்றி, அவரது இந்த சாதனை புதிய ஒலிம்பிக் சாதனையாகவும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

வேகமான உசைன் போல்ட் எப்படி விவேகமானவராக இனங்காட்டினார் என்ற கேள்வி எழலாம். உண்மையில் இறுதிப் போட்டிக்கு முன்னதான அரையிறுதிப் போட்டியின்போது, வேகமாக ஓடிவந்த போல்ட் முடிவு எல்லையை அடைவதற்கு சில மீற்றர் தூரங்கள் இருந்த நிலையில் தனக்கு இரண்டாவதாக வருபவரின் இடைவெளியை உறுதிப்படுத்திக்கொண்டு தனது ஓட்ட வேகத்தைக் குறைத்துக்கொண்டே முதலாவது இடத்தை அடைந்தார். இதில் போல்ட் செய்த விவேகமான செயல் என்னவென்றால், தன்னால் ஓடக்கூடிய அதிகூடிய ஓட்ட வேகம் இவ்வளவுதான் என்பதை அரையிறுதியிலேயே வெளிப்படுத்தியிருந்தால், எதிர் வீரர்கள் இறுதிப் போட்டிக்குத் தம்மை தயார்ப்படுத்திக்கொள்வதற்கு போல்டின் அந்த ஓட்டவேகம் ஓர் இலக்காக அமைந்திருக்கும். எனவே, அந்த இலக்கை அவர்களுக்கு கொடுத்துவிடக்கூடாது என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு விவேகமாக நடந்துள்ளார், ஓடியுள்ளார் போல்ட்.

# பதக்க மன்னன் மைக்கல் பெல்ப்ஸ்



**ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தமாக அதிக பதக்கங்களை வெற்றியீட்டியவர் என்ற பெருமையை அமெரிக்காவின் நீச்சல் வீரர் பெல்ப்ஸ் பெற்றுள்ளமை வளர்ந்து வரும் நீச்சல் வீரர்களுக்கு நல்லதொரு முன்னுதாரணமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.**

**27 வயதுடைய பெல்ப்ஸ் 2004 ஆம் ஆண்டு எதென்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தான் முதலாவதாக அறிமுகமாகினார். இந்தப் போட்டியில் இவர் எட்டுப் பதக்கங்களை வெற்றியீட்டியிருந்தார்.**

**இதனையடுத்து 2008 ஆம் ஆண்டில் சீனா பீஜிங்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் எட்டுத் தங்கப் பதக்கங்களை வெற்றியீட்டியிருந்தார். இதற்கமைய, இந்த வருடம் 2012 ஒலிம்பிக் போட்டிகளில் பெற்றுள்ள ஆறு பதக்கங்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக இவர் இருபத்திரெண்டு பதக்கங்களை வென்று உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.**

# 15 வயது மாணவி தங்கம் வென்றார்



15 வயது மாணவியொருவர் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கமொன்றை வென்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

லித்துவேனியா நாட்டைச் சேர்ந்த ருதா மெய்லுடிதே என்பவரே நீச்சல் போட்டியில் 100 மீற்றர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் தங்கத்தை வென்றவராவார். அமெரிக்காவின் உலக சாதனையாளரான ரெபேக்கா சோனியையும் தோற்கடித்தே ருதா இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் மேற்படி 100 மீற்றர் நீச்சல் தூரத்தை 05.47 செக்கன்களில் நீந்தி முடித்தே இந்த சாதனையை நிலைநாட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கியூரியோசிடி' விண்கலம் செவ்வாயில் வெற்றிகரமாக தரையிறங்கியது

*செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வுமையம் அனுப்பிய 'கியூரியோசிடி' (Curiosity) விண்கலம் இம்மாதம் (ஒகஸ்ட்) 6 ஆம் திகதி செவ்வாயின் மேற்பரப்பில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. அமெரிக்க விண்வெளி வரலாற்றின் மற்றுமொரு மைல் கல்லாக இந்நிகழ்வு கருதப்படுகின்றது*

## செவ்வாய் கிரக ஆய்வு

பூமியில் இருந்து சுமார் 570 மில்லியன் கி.மீற்றர் தொலைவில் செவ்வாய் கிரகம் அமைந்துள்ளது. அங்கு உயிர்கள் வாழ்ந்ததற்கான அடையாளம் உள்ளதா?, உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழல் நிலவுகின்றதா? போன்ற பல்வேறு சந்தேகங்கள் பல ஆண்டுகளாக நிலவி வருகின்றன. இந்நிலையில், அந்த சந்தேகங்களுக்கு தீர்வு காணும் முகமாகவே நாஸா கியூரியோசிடி ரோவர் விண்கலத்தை வடிவமைத்து செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அனுப்பிவைத்தது.

கடந்த வருடம் (2011) நொவெம்பர் மாதம் 26 ஆம் திகதி அமெரிக்காவின் கேப் கெனவரல் விண் ஏவுதளத்திலிருந்து கியூரியோசிடி விண்கலம் அற்லஸ் ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. விண்ணுக்கு ஏவப்பட்டு சுமார் 8 மாதங்கள் கடந்த நிலையிலேயே இம்மாதம் 6 ஆம் திகதி அது செவ்வாயில் தரையிறங்கியுள்ளது.




## கியூரியோசிடி விண்கலம்

இந்த கியூரியோசிடி விண்கலத்தில் நவீன ஆய்வுகூடம் ஒன்றுள்ளது. லேசர் கதிர் கருவி, பாறையை துளை போடும் கருவி உள்ளிட்ட 10 முக்கிய ஆய்வுக்கருவிகள் அதில் உள்ளன. அவற்றின் உதவியுடன் கியூரியோசிடி விண்கலம், செவ்வாய் கிரகத்தின் கல், மண் போன்றவற்றை வெட்டி எடுத்து ஆய்வுசெய்து அதுபற்றிய விவரங்களை பூமிக்கு அனுப்பும்.


இதனூடாக, உயிர் வாழ்வதற்குத் தேவையான ஒக்சிஜன், நைட்ரஜன், கார்பன், பொஸ்பரஸ் மற்றும் சல்பர் போன்றவை செவ்வாயில் உள்ளனவா? என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அத்துடன், செவ்வாய்க் கிரகத்தில் ஏற்கனவே நீர் இருப்பதற்கான அறிகுறிகளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளபோதும், தற்போது கியூரியோசிடி நடத்தும் ஆய்வின்மூலம் அதை மேலும் உறுதிசெய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

## தரையிறங்கிய விதம்

கியூரியோசிடி விண்கலம்





செவ்வாய் கிரகத்தின் தென்பகுதியில் ஒரு மலையடிவாரத்தில் தரையிறங்கியது.

விண்கலம் செவ்வாயில் தரையிறங்கும் காட்சியை நாஸாவின் கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடி, நாஸா விஞ்ஞானிகள் படிப் படியாக கண்காணித்துக்கொண்டிருந்தனர். விண்கலம் செவ்வாயில் தரையிறங்குவதற்கு ஒரு சில நிமிடங்கள் இருக்கும் நிலையில், நாஸா விஞ்ஞானிகள் மிகுந்த பதற்றத்துடனும் பரபரப்புடனும் இருந்தனர். கியூரியோசிடி வெற்றிகரமாக, தரையிறங்குவதைப் பார்த்ததும் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். அங்கிருந்த விஞ்ஞானிகள் அனைவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவியும் கைகுலுக்கியும் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டனர்.

கியூரியோசிடி விண்கலம் செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கும் காட்சியை நாஸா விண்வெளி ஆய்வு மையம் நேரடியாக ஒளிபரப்புச் செய்தது. அத்துடன், நியூயோர்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில் பெரிய திரை வைத்து நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டது. இதனை ஏராளமானோர் பார்த்து மகிழ்ந்தனர்.

கியூரியோசிடி விண்கலம் செவ்வாயில் தரையிறங்கி மூன்று, நான்கு நிமிடங்களில் அதில் இருந்து பூமியில் உள்ள கட்டுப் பாட்டு அறைக்கு சமிக்ஞைகள் வரத் தொடங்கின. அடுத்து, செவ்வாய் கிரகத்தின் தரைப்பகுதி குறித்து சிறிய அளவிலான கறுப்பு-வெள்ளை படங்களை அது எடுத்து அனுப்பியது. அந்தப் படங்கள் நாஸாவிலுள்ள திரையில் பெரிதுபடுத்திக் திரையிடப்பட்டது. அத்துடன், கியூரியோசிடி விண்கலம் செவ்வாய் கிரகத்தில் சுமார் 2 ஆண்டுகள்வரை தனது ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் அறியவருகின்றது.

### கியூரியோசிடியின் சிறப்பம்சங்கள்

- ★ *கியூரியோசிடி விண்கலத்தின் எடை 1 டொன்.*
- ★ *இதை வடிவமைக்க 250 கோடி டொலர் செலவாகியுள்ளது.*
- ★ *6 சக்கரங்களுடன் ஒரு சிறிய கார்போன்ற தோற்றம் கொண்டது.*
- ★ *12 அதிநவீன கெமராக்கள் அதில் உள்ளன.*
- ★ *கிரகம் விட்டுக் கிரகம் சென்றுள்ள விண்கலங்களில் கியூரியோசிடிதான் மிகப் பெரியது.*
- ★ *ஏற்கனவே, செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட ஸ்பிரிட், ஒபர்சுனிடி விண்கலங்களைவிட 15 மடங்கு அதிக நவீன விஞ்ஞானக் கருவிகளை கியூரியோசிடி கொண்டுள்ளது.*


விண்கலம் தரையிறங்கியதும் அனுப்பிய முதல் படம் நாஸாவில் திரையிடப்பட்ட காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்:— ஏவுகணை

## ரொபர்ட் ஹட்சிங்ஸ் கொடர்ட்

(1882-1945)



**1882** ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாநிலத்தில் உள்ள வோர்செஸ்டரில் பிறந்தவர்தான், ரொபர்ட் ஹட்சிங்ஸ் கொடர்ட். சிறு வயதிலேயே இவர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டமையால், இவரது பாடசாலைக்கல்வி பலமுறை தடைப்பட்டது. கல்வியில் சிறந்த மாணவனாக வர முடியாத நிலையும் ஏற்பட்டது. அவரது நலிந்த உடல் நிலையின் காரணமாக, கடினமான வேலைகள் செய்யவும் அவர் அனுமதிக்கப்படவில்லை.

இவர் தமது ஓய்வு நேரங்களில் எச்.ஜி.வெல்ஸ் என்பவர் எழுதிய 'உலகங்கள் இடையே போர்' என்ற நூலை ஆழ்ந்து படித்தார். அதிலுள்ள சில விடயங்களை தாம் கண்டுபிடிக்க வேண்டுமென எண்ணினார். அதன்பின்னர், இரண்டே வருடங்களில் உடல் தேறி உயர் பள்ளியில் சேர்ந்தார். தொடர்ந்து ஹஸ்டர் தொழில்நுட்ப பயிற்சிக்கழகத்தில் இணைந்த ரொபர்ட் வகுப்பில் முதல்தர மாணவராகத் திகழ்ந்தார். அவர் தொழில்நுட்பப் பயிற்சிக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த போதே கோள்களுக்குப் பயணம்செய்யும் பல கட்ட ஏவுகணையைப் பற்றியும் ஆராய்ந்தார். உயிர் வளியும் நீர் வளியும் கொண்டு தயாரித்த எரிபொருளைப் பயன்படுத்தி, அதனை ஏவும் முறை பற்றியும் ஆராய்ந்தார்.

இக்காலகட்டத்தில் எரிதிரவத்தைக் கொண்டு மிக உயரிய மட்டங்களை எட்டும் முறை பற்றி பல விஞ்ஞானக் கழகங்கள் அலட்சியம் செய்தன. ஆனால், ஸ்மித் ஸோனியன் கழகம் இத்துறையில் ஆய்வுகளைச் செய்த அவரைப் பாராட்டி, உதவித் தொகையும் வழங்கியது. அக்கழகத்தின் அறிவுரையை ஏற்ற அரசின் பாதுகாப்புத் துறையினர் ஹட்சில்ஸ் கொடர்ட்டை அணுகியதன் காரணமாக, போருக்குப் பயன்படக்கூடிய ஏவுகணைகளை அவர் ராணுவத்தினர் முன்னிலையில் பறக்க விட்டார். அந்த ஏவுகணைகளின் திறன்கண்ட இராணுவம், அதனைப் பயன்படுத்தத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து நிலவுக்கும் ஏவுகணையைச் செலுத்த முடியும் என்று முடிவுசெய்தார். அத்துடன், அவர் தனது நான்காவது ஏவுகணையை வெற்றிகரமாக செலுத்திய போது உலகம் வியந்தது.

1930 இல் அவர் பறக்கவிட்ட ஏவுகணை 2,000 அடி உயரத்தில் 500 மைல் வேகத்தில் பறந்தது. இந்த ஏவுகணையைப் போரில் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பது உணரப்பட 1941 இல் ஏவுகணைத்துறை உருவாகியது. காலப்போக்கில் ஏவுகணை போருக்கு மட்டுமன்றி; நன்மையான செயலுக்கும் பயன்படும் என்பதை அனைவரும் அறிந்தனர். இத்தகைய பெரும் சிறப்புகளைப் பெற்ற ரொபர்ட் ஹட்சிங்ஸ் கொடர்ட் அவர்கள் 1945 இல் மரணமடைந்தார்.

-ஆர்.ஜே

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 4800

சி.பிருந்தா, பன்சல வீதி, ஹட்டன்.



அங். இல: 4801

டீ.செல்சியா, தும்பர தோட்டம், இங்கியா.



அங். இல: 4802

த.நிதுஷன், மடுக்கரை, நானாட்டான்.



அங். இல: 4803

எல்.எம்.ஹாரூன், சோனக வீதி, தொட்டவத்தை.



அங். இல: 4804

எஃப்.சர்பா பேகம், ஆலிம் வீதி, மீராவோடை-04.



அங். இல: 4805

எஸ்.தவயோகன், கோயில் வீதி, ராகலை.



அங். இல: 4806

ஜே.எம்.முஸ்னி, காஸிம் வீதி, கல்முனைக்குடி-11



அங். இல: 4807

ச.நந்தினி, ஒப்பல்கல S.P.C, கம்மடுவ.



அங். இல: 4808

எம்.உஸாமா, ஆமர் வீதி, கொழும்பு-13



அங். இல: 4809

அக்தர் ஜஹான், உடுதெனிய, மாரஸ்ஸன.



அங். இல: 4810

மோ.நிரோஜன், பனிக்கன்குளம், மாங்குளம்.



அங். இல: 4811

எல்.எம்.நப்ரீஸ், மக்காமடி வீதி, ஏறாவூர்-03A

# உலகின் ராட்சத சிலந்தி

உலகிலேயே மிகவும் பெரியதும் நிறை கூடியதுமான சிலந்தி வகை **'Goliath Bird Eating Spider'** எனும் சிலந்தியாகும். இதன் விஞ்ஞானப் பெயர் ***Theraphos blobdi*** என்பதாகும். இந்த சிலந்தி ஆறு அவுன்ஸ் நிறையைக் கொண்டுள்ளது. இது தன் கால்களைப் பரப்பும்போது, 30 சென்ரிமீற்றர் வரையிலான நீளத்தை உடையதாகக் காணப்படுகின்றது. இனப்பெருக்கத்தின் பின்னர் ஆண் சிலந்தியை பெண் சிலந்தி, தனக்கு இரையாக்கிக் கொள்கின்றது. இந்த ராட்சத சிலந்தி இனமானது, பறவைகளையும் தவளைகளையும்கூட உணவாகக் கொள்ளும் பயங்கரமானவை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.






படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................

முகவரி: ..................................

..................................

பாடசாலை: ..................................

வகுப்பு: ..................................

திகதி: ..................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது உலகில் அதிகமாகப் பேசப்படும் நாடாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் காணப்படும் சிரியா நாடு திகழ்கின்றது. கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் அதாவது கடந்த 16 மாதங்களாக சிரியாவில் பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. சிரியாவின் ஜனாதிபதி பஷீர் அல். அஸாத் அவர்களின் நீண்டகால ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளும் சிரிய மக்களும் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்



# சிரியாவின் மரண பூமி



இந்த நிலையில் இந்நாட்டில் நிகழும் மோதல்களுக்கப்பால் மிகவும் பழமைவாய்ந்த கட்டடமொன்றை தொல்பொருள் ஆய் வாளர்கள் அங்கு கண்டுபிடித்துள்ளனர்.

**10,000 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கட்டடம்**

சிரியாவில் கண்டுபிடிக் கப்பட் டதோ சுமார் 10,000 வருடங்களுக் கும் அதிகமான பழமை வாய்ந்த கட்டடமொன்றாகும். 'மரணித்தவர்களின் பூமி' எனும் பெயரில் அழைக்கப்படும் இந்தக் கட்டடம் 10,000 வருடத்தைவிட, அதிக பழமை வாய்ந்தது என்றும் கருதுகின்றனர். இது எகிப்திய பிரமிட்டுகளை விடவும் பழமை வாய்ந்தது. எனினும், அகழ்வாராய்ச்சியாளர்கள் இதனை ஆய்வு செய்ய முடியாத நிலையில் உள்ளனர். ஏனெனில், இப்பொழுது சிரியாவில் கடும் யுத்தம் நடைபெற்று வருவதால் தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசத்தை நெருங்க முடிய வில்லை.

கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தொல்பொருளை முதன்முதலாக 2009 ஆம் ஆண்டே கண்டுபிடித்தனர். இது பாலைவனப் பகுதியில் அமைந்துள்ளது. கற்களால் உருவாக் கப்பட்ட செதுக்கல் கலைப் பொக்கிஷங்கள் இப்பிரதேசத்தில் உள்ளன. தொல்பொருள் ஆய்வாளரான ரொபர்ட் மேசன் தலைமையிலான ஆய்வுக்குழுவே இதனைக் கண்டுபிடித்தது.

தொல்பொருள் கட்டட உத்தில் உள்ள சிற்பங் களும் கற்தூண்களும் மிக அற்புதமானவை. அதேபோன்று, அவை மர்மமானவையும் கூட. அங்குள்ள சிற்பங்கள் எதனைக் குறிக்கின்றன என்றும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன் அவை உண் மையிலேயே எவ்வளவு காலம் பழமை வாய்ந்தவை என்றும் இதுவரை சரியாக கண்டுபிடிக்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. மீண்டும் ஒருமுறை ஆய்வினை மேற்கொள்ள அப்பிரதேசத்திற்கு செல்ல சந்தர்ப்பம் கிடைத்தால், முழு விபரங்களையும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் என பேராசிரியர் மேசன் நம்பிக்கை வெளியிட்டார்.

இத்தொல்பொருளான பழமை

**தொல்பொருள் கட்டடடத்தில் உள்ள சிற்பங்களும் கற்தூண்களும் மிக அற்புதமானவை. அதேபோன்று, அவை மர்மமானவையும் கூட. அங்குள்ள சிற்பங்கள் எதனைக் குறிக்கின்றன என்றும் இதுவரை கண்டறியப்பட வில்லை**

வாய்ந்த கட்டடம் சிரியாவின் தலைநகராகிய டமஸ்கஸ் நகரில் இருந்து 50 மைல் வடக்கே அமைந் துள்ளது. இதற்கருகில் பாக்கா எனும் கிராமம் அமைந்துள்ளது.


அண்மையில் இக்கிராமத்தில் கடுமையான ஆயுத மோதல் நடைபெற்றது. இக்கிராம மக்களில் 10 க்கும் மேற்பட்டவர்கள் கொல் லப்பட்டதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. இதனால், இச்சிற்பங்களும் கற்தூண்களும் புதிய யுகத்தின் இறுதிப் பகுதியில் அல்லது வெண்கலயுகத்தின் ஆரம்பகாலத்தில் அதாவது, 6,000 வருடங்கள் முதல் 10,000 வருடங்களுக்கு உட்பட்ட காலத்திலேயே இதனை உருவாக்கி இருக்க வேண்டும் என பேராசிரியர் மேசன் குறிப்பிடு கின்றார்.

''தொல்பொருட்களிடையே காணப்படும் கற்தூண்கள் அதற்கருகில் காணப்படும் கருங்கருங்கற்களாலோ, சுண்ணக்கற்களாலோ உருவாக்கப் படவில்லை. 'நிச்சயமாக இது மரணித்தவர்களின் பூமிதான், உயிர் வாழ்வதற்கு இது பொருத்த மான சூழலைக் கொண்டிருக்க வில்லை. இத்தொல்பொருட்களின் மர்மங்களை எப்போது துலக்க முடியும் என்று எம்மால் நிச்சயமா கக் கூறமுடியாது'' என பேராசிரியர் மேசன் கூறுகின்றார்.





ரோம தேவாலயம்




தொல்பொருளாகிய கட்டடத்தின் அருகில் மற்றொரு தொல்பொருளாகிய தேவாலயம் ஒன்று காணப்படுகின்றது. அத்தேவாலயத்தை தீர்மார்மூசா என அழைக்கின்றனர். அது 19 ஆம் நூற்றாண்டில் உரோமர் களால் கட்டி எழுப்பப்பட்ட பழமையான தேவாலயமாகும். இன்று இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருட்கள் அழிந்து வருகின்றன. அவ்வாறு அழிவதற்கு பூமியதிர்ச்சியே காரணம் என பேராசிரியர் மேசன் மேலும் விளக்கமளிக்கின்றார். புராதன உரோம காவலரண்களைத் தேடி ஆய்வுசெய்யச் சென்ற பொழுதே தற்செயலாக மரணித்த வர்களின் பூமியைக் காணக்கிடைத்தது என்றும் அவர் கூறுகின்றார். -(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர்களுக்கான மின்னஞ்சல் சேவை



இணையத்தளங்களில் சிறுவர்களுக்கான பிரத்தியேக மின்னஞ்சல் சேவையொன்று அறிமுகமாகியுள்ளது. 'மெயிலி' என்னும் பெயரிலான அந்த சேவையை பார்த்ததுமே சிறுவர்களுக்கு மட்டுமன்றி; பெற்றோர்களுக்கும் பிடித்துப் போவது நிச்சயம். இந்த சேவை அந்த அளவுக்கு வண்ணமயமானதாக இருக்கிறது. ஜிமெயில், பழைய ஹொட்மெயில் போன்று அனைத்தையும் இதில் டைப் செய்துகொண்டிருக்கத் தேவையில்லை.


சிறுவர்கள் இதிலுள்ள தூரிகையைப் பயன்படுத்தி வண்ணமயமான சித்திரங்களை வரைந்து வண்ணப் பென்சிலால் வாசகங்களை எழுதலாம். அவ்வாறே, இதிலுள்ள கெமரா மூலம் படங்களையும் க்ளிக் செய்து சேர்த்துக் கொள்ளலாம். அதன்பின்னர், அழகான பின்னணியில் இருந்து பொருத்தமானவற்றை தெரிவு செய்துகொள்ளலாம்.

சிறுவர்கள் தங்களுக்கான இன்பொக்ஸையும் பெற்றுக்கொண்டு அதில் அப்பா, அம்மா, தங்கை, தம்பி போன்றோரை சேர்த்துக் கொள்ளலாம். இந்த மின்னஞ்சலில் இருந்து அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என மின்னஞ்சல் அனுப்பி மகிழலாம்.


# பெரிய ஃபைல்களை தரவிறக்கம் செய்வதற்கு மென்பொருள் அறிமுகம்

பெரிய அளவுடைய கோப்புகளை (Files) தொடர்ச்சியாக பரிமாற்றம் செய்வதற்கு Zeta Uploader எனும் மென்பொருள் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது. இம்மென்பொருளைத் தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிய பின்னர், அதனை இயக்கி Files to upload எனும் பகுதியில் காணப்படும் Add files/Add folder எனும் அம்சத்தின் ஊடாகப் பரிமாற்றம் செய்ய வேண்டிய கோப்புக்களை இணைக்க வேண்டும்.


பின்னர் யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவர்களது மின்னஞ்சல் முகவரியை உட்செலுத்தி, செய்தி ஒன்றினையும் 'டைப்' செய்த பின்னர் Update now என்பதனை க்ளிக் செய்யவும். இதன்பின்னர் குறிப்பிட்ட கோப்பு தரவேற்றப்பட்டு உரியவருக்கு அனுப்பப்படும். அனுப்பியபின் மின்னஞ்சலுக்கு செய்திகளுடன் இணைப்பொன்று அனுப்பப்படும். அதனை க்ளிக் செய்து குறிப்பிட்ட நபர் கோப்பினை தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.




# கூகுளில் கெல்குலேட்டர்




கூகுள் சேவையானது, கெல்குலேட்டர் (Calculator) வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கெல்குலேட்டர் கூகுளின் முகப்புப் பக்கத்தில் பார்க்க முடியாது. ஆனால், தேடல் பக்கத்தில் எளிதான கணக்கு (For Ex : 12+34) ஒன்றை செய்து, Search என்று க்ளிக் செய்தால் கெல்குலேட்டர் திரையில் வருகிறது. 34 வகையான பட்டன்களைக் கொண்ட இந்த கெல்குலேட்டரில் அனைத்து விதமான கணிதமுறைகளையும் கையாளலாம்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 15, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org